[illegible]

[illegible]

17-Oct 1922.

C

JL
ɲ211, N15AB
M22.8.4.
187441

முந்துங்கள்! முந்துங்கள்!!

இச்சமயம் தவறினல் மறுசமயம் வாய்ப்பதரிது.

☞ நாவல்கள் தேவையான அனேக சந்தாதாரர்கள் ஒரு நாவலுக்கு ஆர்டர் செய்து விலை குறைத்து அனுப்பும்படி யெழுதுகிறாகள். ஆகையால், இந்த **1**-வது பேஜ் முதல் **8**-வது பேஜ் வரை உள்ள நாவல்களுக்கு அடியில் குறித்த தேதி வரை விலை குறைக்கப்பட் டிருக்கிறது. சந்தா நேம்பர் சரியாகத் தெரிவித்தால் தான் இதில் குறித்தமாதிரி அனுப்பப்படும். (30-11-22 வரையில்.)

வெளியாய்விட்டது! வெளியாய்விட்டது!! வெளியாய்விட்டது!!!

மிக்க அபூர்வமான] [துப்பறியும் நாவல்

இந்திராபாய்

அல்லது

இந்திரஜாலக் கள்ளன்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஒரு துப்பறியும் நாவல்: ஆனல் அனேகம் துப்பறியும் நாவல்களை விட இதுமிக்க அபூர்வமானது. இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனுதலின், அவன் தன் கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட தன் சுய உருவத்தைக் காட்டாமலே செய்யும் மிக்க அபூர்வமானவையும், கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியானவையும், முதலில் அசம்பாவிதமாகத் தோற்றத் தக்கவையுமான பல கொலை களவுகள் மிக்க அதிசயமானவைகளாகவும் இதுகாறும் கேட்டிராத விதமானவைக ளாகவுமே யிருக்கும்.

இந்திராபூாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணபத்துகளி லிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணராவ் செய்யும் அற்புத சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்கு மிக்க பிரமையை யுண்டாக்கும். துப்பறியும் நாவலில் பிரியமுடையோர் இதை வாசிக்காது விட்டால் பின்னல் அதற்காக உண்மையில் வருத்தப்படுவார்கள். உயர்ந்த க்ளேஸ் கடிதத்தில் அச்சியற்றப்பட்டது. சுமார் 530 பக்கங்கள் கொண்டது.

[illegible] –8–0. தபாற்கூலி பிரத்தியேகம்.

[illegible] சந்தாதாரர்களுக்கு * 30-11-1922 வரை

[illegible] ரைக் குறித்தாலன்றிக் குறைந்த விலைக்கு [illegible] ாட்டாது.

[illegible], சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

NOV 1922
NI5113
182441

ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய
சரித்திரமும், உபதேசங்களும்.

சில வருஷங்களுக்கு முன்னர், அறியாத பருவத்திலேயே உலகப் பற்றுக்களைத் துறந்து, அரிய அற்புதங்களை யெல்லாம் செய்து பேரின்பத்தை யடைந்த மகாத்மாவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சரை உலகத்தில் பெரும்பான்மையும் எல்லோரு மறிவர். அன்னிய நாடுகளுக்கும் சென்று, ஆங்காங்கே, 'இந்து மதமே அழிவற்ற மதம்' என்று அனைவரும் பிரமிக்கப் பிரசங்கங்கள் புரிந்து, இந்து மதக் கொள்கைகளை யெல்லாம் ஆங்காங்குள்ள பலர் மனதிலும் புகுவித்து, அவர்களிற் பலரை இந்துமதத்தில் சேர்த்து, திக்குவிஜயஞ் செய்துவந்த ஞான சிம்ஹமாகிய ஸ்ரீ விவேகானந்த சுவாமிகளுக்கும் இந்த இராமகிருஷ்ணரே ஞானாசிரியர். இவருடைய துறவைப்பற்றிய சரித்திரமோ மிகவும் அற்புதமானது. இவர் செய்த அற்புதச் செயல்கள் எத்தனையோ உண்டு. இவர் நன்றாக எழுதப் படிக்கத் தெரியாதவராயிருந்தும் உயர்ந்த ஞானமார்க்கத்தை யுணர்ந்து தாம் அனுஷ்டித்ததோடு தம் சிஷ்யர்களுக்கும் எளிதில் விளங்கும்படி தக்க உதாரணங்களோடு அதனைப் பற்பலவிதமாக உபதேசித்திருக்கின்றார். அவையெல்லாம் பக்தி, ஞானம், மோக்ஷம் முதலிய பெரிய விஷயங்களை யெல்லாம் சுலபமாக விளக்கிக் காட்டக்கூடியவைகள்.

இத்தகைய மகானுடைய அற்புத சரித்திரங்களையும், நித்திய ஞானோபதேச மொழிகளையும் தமிழில் ஒரு புத்தகமாக்கி வெளியிட்டால் தமிழ் நாட்டார்க்குப் பெரிதும் பயன்படுமென்று கருதி, அன்னிய பாஷைகளிலிருந்த அவற்றை, சிறந்த விற்பன்னரைக்கொண்டு மொழி பெயர்ப்பித்து, உயர்ந்த கடிதத்தில் பிழையின்றி அச்சிட்டு வெளிப்படுத்தி யிருக்கின்றோம். இப்புத்தகம் கிரௌன் 16-ல் 400-பக்கங்கள்கொண்டது பிழையின்றி அச்சிட்டு உயர்ந்த காலிகோ பைண்டும் செய்யப்பட்டிருக்கிறது.

ஈசுவரபக்தி, ஈசுவரனுக்கும் ஜீவனுக்கும் உள்ள சம்பந்தம், குருவின் தன்மை, மதத்தினியல்பு, முமுக்ஷுக்களின் பேதங்கள், ஈசுவரப்பிரீதி, சாதுசங்கம், வைராக்கியம், ஞானத்திற்கிடையூறுகள், பெண்ணாசை, பொன்னாசை, அகங்காரம், ஆகாரம், நிஷ்டை, ஈசுவரகிருபை, சுயாநுபூதி நிலைமை, முத்தியின் தன்மை, கோட்பாடுகள், சித்தர்லக்ஷணம், சன்னியாசியின் லட்சியங்கள், மனிதர் வகுப்பு, கிருகஸ்தர்க்குரியபோதனை, சித்திகள், கர்மநியதி, முதலிய அநேக அரிய விஷயங்களும், இன்னும் பல சிறந்த உபதேசங்களும் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. சிறு பிள்ளைகளுங் கூட ஆத்ம ஞானத்தை மனதில் உணரும்படி உலகத்தில் நடக்கும் சாதாரண விஷயத்தையே உதாரணங் காட்டித் தெளிவாக அது சொல்லப்பட் டிருக்கின்றது. எவரும் இவ்வுபதேசங்களைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளலாம். ஒருவன் எளிதில் ஆத்மஞானத்தை அடைதற்கு இப்புத்தகமொன்றே போதும். இதனைப் படித்தால் இம்மை, மறுமை ஆகிய இரண்டிடத்தும் பெரிய நன்மையை அடையலாம். இது தமிழ் மக்களின் அதிஷ்ட வசத்தாலேயே இப்போது வெளிவந்துள்ளது. உலகநன்மையைக் கருதியே இக்கடுதாசிப் பஞ்சகாலத்திலும் இந்நூல் அச்சிட்டு இதற்குக்குறைந்தவிலையே ஏற்படுத்தியிருக்கிறோம். இப்புத்தகத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்சருடைய ஆப்டோன் படமும் சுவாமி விவேகாநந்தருடைய படமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1 12 0.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-8-0.

விலாசம்: **மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
நெ 6, வெங்கடேசமேஸ்திரி வீதி,
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

இரத்தினபுரி இரகசியம்.

1-ம் பாகம் ரூ. 1 12 0 2-ம் பாகம் ரூ. 2 4 0

இது ஆங்கிலத்தில் நாவல் எழுதுவதில் ஒப்புயர்வற்றவரென்று உலகப் பிரசித்திபெற்ற G. W. M. ரெய்னால்ட்ஸ் என்பவரால் வரையப்பெற்ற அதியற்புதமான நாவல்களில் முதன்மை வாய்ந்தது. இதுகாறும் ஒருவராலும் தமிழில் எழுதப்படாதது. தற்காலத்திய தமிழ் நாவல்கள் எழுதுவதில் பிரக்யாதி பெற்றவரும் மேற்படி ரெய்னால்ட்ஸ் என்பவரின் நாவல்களில் பெரும்பாலானவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தெழுதியவருமாகிய ஸ்ரீமான் ஆரணி-குப்புசாமி முதலியாரியற்றியது. தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப்பட்ட இந்நாவலில் அடங்கியுள்ள அதியாச்சரியமான விஷயங்களைக் கண்ணுற்ற சந்தாதார்கள் பெரும்பாலார் மேற்படி நாவல் தங்களுக்குப் பிரத்தியேகமாய் வேண்டுமென்று கோரியபடியால் அதைப் புத்தகரூபமாய் வெளியிட நேர்ந்தது.

இந்த நாவலில்தான் கிரந்தகர்த்தா தமது இணையற்ற சாமர்த்தியத்தை முழுதும் வெளியிட்டிருக்கிறார் என்பது ஆங்கிலத்தில் அவர் நாவல்களை வாசித்த யாவரும் அறிந்ததோருண்மையாகும். இதில் வேறு எக்கதைகளிலும் நாம் கேட்டிராத அற்புதமும் நெஞ்சுதிடுக்கிட்டுத் திகைக்கக்கூடியதுமான சூட்சிகள் (Plots) நிறைந்திருப்பதோடு, ஆடவர்களின் பலபேதமான நடவடிக்கைகளும் அதனாலடையும பலன்களும், ஸ்திரீகளின் குணபேதங்களும், கற்புடைய ஸ்திரீகள் தங்கள் கற்பைக் காக்கும் விஷயத்தில் உபயோகிக்கும் அணிகரமான வீரதீர சாமர்த்தியச் செயல்களும் தெளிவாய் விவரிக்கப்பட் டிருக்கின்றன. இன்னும் தற்கால நாகரிகத்தை யொட்டி நமது நாட்டாருக்கு இன்னின்ன ஆசாரங்கள் நன்மை பயக்குமென்றும், இன்னின்ன ஆசாரங்கள் தீமை பயக்குமென்றும், நமது மாதர் கடைப்பிடிக்கவேண்டிய ஆசார வொழுக்கங்கள் இன்னின்னவை யென்றும் அந்தந்த சமயங்களில் மனதிற் றரிக்கும் வண்ணம் விவரிக்கப்பட் டிருக்கின்றன. இது ஆதிமுதல் அந்தம்வரையில் மனதை முழுதும் கவரக்கூடிய தென்பது கூறாமலே விளங்கும். இதை வாசித்தோர்க்கு இந்த நாவலின் சிறப்பு ஏற்கெனவே விளங்குமாதலால் நாம் அதிகம் கூறுவது அநாவசியமே.

1-ம் பாகம் 508-பக்கங்களும், 2-ம் பாகம் 712-பக்கங்களும் கொண்டது.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில்

1-ம் பாகம் 1-10-0. 2-ம் பாகம் 2-2-0. 2-பாகமும் ரூ. 3-8-0

புதிய] சதானந்தர் [நாவல்

அல்லது சமரபுரித் துறவியின் சம்சார வாழ்க்கை.

ஆய்ந்து பாராமல் ஆத்திரத்தால் தன் உத்தம மனைவியின் மேல் சந்தேகங்கொண்டு சந்நியாசியாகி மறுபடி மணம் புரிந்துகொண்ட ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றிக் கூறும் இந்த நாவல் ஸ்ரீமான் நாகை சோ. தண்டபாணிப்பிள்ளை யவர்களால் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இக்கதையால் எந்தக் காரியத்தையும் தீர்க்காலோசனை செய்து உண்மையை யறியாது அவசரப்பட்டுச் செய்வது பெருந்தவறென்பதும், உண்மை விரக்தி வராத சந்நியாசம் நிலைக்காதென்பதும், உத்தமமான மனைவி வாய்க்கப்பெற்றவன் சகல பாக்கியங்களையும் சந்தோஷத்தையும் பெறுவானென்பதும் இன்னும் பல உலக அநுபவங்களும் நன்கு விளங்கும். இது நேர்த்தியாக அச்சியற்றப்பட் டிருக்கிறது. விலை ரூபா 1-4-0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-0-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்

மலையாள பகவதி.

(ஓர் இனிய தமிழ்க் கதை.)

இது, அடங்கா நகைப்பை யுண்டாக்கும் ஓர் அற்புத தமிழ்க்கதை. இப்புத்தகத்தின் முதல் அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித்தவுடன் உண்டாகும் சிரிப்பு புத்தக முழுவதையும் படித்து முடித்த பின்னருங்கூட நெடுநேரம் வரை அடங்காதிருக்கும். பேய் பிசாசு பில்லிசூனியம் முதலியவற்றின் விநோதங்களும், மாந்திரீகம், பேயாட்டு, கோடாங்கிக்கூத்து முதலிய ஜெக ஜால மாயா விநோதங்களும், அண்டப்புளுகர், வண்டிப்புளுகர், வாக்கின் புளுகர், முதலிய சண்டப் பிரசண்ட யுக சண்டமாருதக் கோடையிடிப் பெரும் புலித் திடீர்ப்புளுகராகிய பூசாரிகளின் மோசக் கூத்துக்களும், அவுட்டுச்சிரிப்பை யுண்டாக்கத் தக்க பல அற்புத விநோதங்களும், இதில் விரிவாகக் காணப்படும். இது வேடிக்கைப் புத்தக மாயினும் ஒவ்வொரு வகையிலும் விவேகத்தை யுண்டாக்கத்தக்கது. தமிழபிமானத்தை விருத்தி செய்யத்தக்கது. 247-பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ. 1.

ஆனந்தபோதினி சந்தாதாரர்களுக்கு 30-11-'22 வரையில் அணா 14.
வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இரண்டாம்] ஆனந்தஸிங் [பதிப்பு.

(11-துப்பறியும் கதைகளடங்கிய கதைக் களஞ்சியம்.)

ம-ள-ள-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் எழுதியது.

இலண்டன் சாமர்த்தியத் திருடர்கள் என்ற நாவலை வாசித்த நண்பர்களனைவரும் அதன் இனிமையை நன்குணர்ந்தே யிருப்பீர்கள். அதைப் போலவே இதிலும் பல துப்பறியும் கதைகள் அடங்கியிருக்கின்றன.

தைரியமும், துணிகரமும், மிக்க புத்தி சாமர்த்தியமும் நிறைந்த ஆனந்தஸிங்கின் அதி யபூர்வச்செயல்கள் இதில் ஒரு விசேஷம். அதோடு இதில் அடங்கிய குற்றவாளிகள் நல்ல அந்தஸ்தி லுள்ளவர்களும், கல்வி யறிவுடையோரு மாதலால் அவர்களுடைய மிக்க சாமர்த்தியமான இணையற்ற செய்கைகள் வாசிப்போர்க்கு மிக்க அதிசயத்தையும், பிரமிப்பையும் யோசனையையு மளிக்கும். இந்த நாவல் முழுமையும் புத்திக்கு மிக்க நன்மையளிக்கும் உணவு நிறைந்திருக்கிறது. 492-பக்கங்கள் கொண்டது. இதில்நூலாசிரியருடையஆப்டோன் படமும்சேர்க்கப்பட்டிருக்கிறது.

இப்புத்தகத்தி லடங்கிய கதைகள்.

1. ஆனந்தஸிங் அல்லது அற்புதத் துப்பறி நிபுணன்	7. ஆறு நெபோலியன்களின் அதிசயம்
2. பள்ளத்தெருப் படுகொலை	8. மூன்று மாணவர்களின் மர்மம்
3. மாயக்களவு	9. பொன் கண்ணாடியின் மர்மம்
4. காட்டேர்க் கடுங்கொலை	10. அபயமாளிகை யதிசயம்
5. மாயஜாலம் கற்ற மர்ம சுந்தரம் பிள்ளை	11. மாயாண்டிப் பிள்ளையின் முடிவு.
6. இரண்டாவது கறையின் மர்மம்	

இதன் விலை ரூபா 2—0—0 தபாற்கூலி வேறு.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-12-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

கற்கோட்டை.

இஃது ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது. 564-பக்கங்கள் கொண்டது. இதன் விலை ரூ. 2. தபாற்கூலி வேறு.

இந்த அற்புதமான நாவல் நமது சஞ்சிகையில் தொடர்ச்சியாய் பிரசுரிக்கப்பட்டு வந்துகொண்டிருந்தது. இதன் விசேஷத்தையறிந்து நமது சந்தாநேயர்களில் அனேகர் இதைப் புத்தகமாய் முடித்துத் தரவேண்டுமென்று பன்முறை கேட்டுக்கொண்டபடியால் இப்போதிருக்கும் காகிதவிலையையும் கருதாமல் அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டியதாயிற்று. முதலியாரவர்களுடைய நாவல்களை வாசித்துள்ள நம் தமிழ் நாட்டார்க்கு இது நேர்த்தியான நாவல் என்று நாம் கூறவேண்டியது அனாவசியம்.

இந்த நாவல் ஆரம்பத்திலேயே வாசிப்போர் மனதைப் பூரணமாய்க் கவர்ந்து கொள்வதோடு முடியுமட்டும் அக்கவர்ச்சி நீங்காது. இது சரித்திர சம்பந்தமான நாவல் எனலாம். இதில் தேசப்பிரஷ்ட மடைந்த சில உயர்குல மகுடவர்த்தனர்கள் தலைமறைந்து வசிக்கும்போது, நெஞ்சு திடுக்கிடும் பிராணாபத்துகளில் சிக்கிக் கொள்வதும், அவற்றினின்று தப்பித்துக் கொள்ள அவர்கள் செய்யும் வீர தீர சாமர்த்தியச் செயல்களும் சொல்லொணா வியப்பையும், சோகத்தையும், வீர ரசத்தையும் ஊட்டும். சில ஸ்திரீகளின் அற்புத நடக்கைகளும், துணிகரமான தீரச்செயல்களும், தம் காதலரிடத்தில் மெய்க்காதல் கொண்ட உத்தம ஸ்திரீகள் தம்காதலர் பொருட்டாய், எவ்வளவுவரையில் ஆடவருக்குச் சமமாய் நடந்துகொள்ளச்சக்தி யுடையவர்களா யிருக்கிறார்க ளென்பதை நன்கு விளக்கும். இக்கதையிலுள்ள முக்கிய விசேஷமாவது, இதிலுள்ள கதாபாத்திரங்களில் ஒவ்வொருவருடைய நடக்கைகளும், அவற்றின் பயன்களும், மானிடர்க்கு இன்றியமையாததான ஒவ்வொரு நீதியை அத்தாட்சியோடு புகட்டுகின்றன.

இது தெளிவான இனிய நடையில், ஆங்காங்கு நாம் உணரவேண்டிய முக்கிய விஷயங்களெல்லாம் விளக்கிக் காட்டி யெழுதப் பட்டிருக்கிறது. காகிதவிலை ஏறியிருந்தாலும் அதற்குத்தக்க விலை யேற்படுத்தாமல் குறைந்த விலையே ஏற்படுத்தி யிருக்கிறோமென்பது புத்தகத்தைக்காணும் ஒவ்வொருவர்க்கும் விளங்கும். காகிதப் பஞ்சத்தால் சொல்ப காபிகளே அச்சிடப்பட்டன. இதில் நூலாசிரியர் திருவுருவப் படமும் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-12-0

மின்சார மாயவன்.

ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் எழுதப்பட்டது.

இது ஓர் மிக்க அபூர்வமான கள்ளன் சரித்திரம். கதாநாயகனாகிய மின்சாரமாயவன் என்னும் கள்ளன் கல்வியும், புத்திசாமர்த்தியமும், தீரமும் உடையவன். ஆதலால் அவன்செய்கைகள் ஒவ்வொன்றும் மிக்க பிரமிப்பை யுண்டாக்கத்தக்கதா யிருக்கும் அவன் ஆபத்தில் சிக்கிக்கொள்ளும் ஒவ்வொரு சமயமும் தப்புவான் என்று ஒருவரும் கருதார்கள். இது அறிவாளிகளுக்கும் மிக்க விருப்பத்தையும், உலக அனுபவம்பெற அறிந்து கொள்ளவேண்டிய பல விஷயங்களையும் அளிக்கக்கூடியது. ஆதிமுதல் அந்தம்வரை மனதைக் கவர்ந்து கொள்ளத்தக்கது. பெண்களைக் கட்டில் வையாது ஆண்பிள்ளைகளை விடுவதுபோல் விட்டுவிடுவதால் நேரிடும் விபரீதங்களை இதில் அனுபவமாய்க் காணலாம், நல்ல கடிதத்தில் சுத்தமாய்ப் பதிப்பிக்கப்பட்டது. 328 பக்கங்கள் கொண்டது. ரூ. 1-8-0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ, 1-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

தோடகமென்னும் வேதசார சமுத்தரணம் மூலமும், உரையும்.

சிவபெருமானுடைய அவதாரமான ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளின் சீடருள் ஒருவராகிய ஆனந்தகிரி யென்பவர் சிரவணஞ் செய்வதைவிட்டு குரு பணிவிடையே பெரியது என்று பன்னுள் செய்து வந்தனர். இவருக்குப் படிக்கத்தெரியாது என்றும் தாங்களே வேதத்தின் பொருளை யெல்லாம் உணர்ந்தவர்க ளென்றும் சில சீடர்கள் நினைத்தனர். அப்போது குரு பணிவிடையானது எல்லா நன்மையையுங் கொடுக்கும் என்பதை விளக்கும் பொருட்டு ஜகத்குரு சங்கராசாரிய சுவாமிகள் இந்த ஆனந்த கிரிக்கு எல்லாவேத சாஸ்திர ஸ்மிருதிபுராண ஆகமங்களின் பொருள் விளங்க வேண்டியது என்று தமது திருவுள்ளத்தே சங்கற்பித்தார்கள். அப்போது எல்லாவேதார்த்தமும் விளங்கினது. அந்த சமயம் குருவின் வஸ்திரம் தோய்த்துக் கொண்டிருக்கும் வேளையாக இருந்தது. அங்கிருந்து குருசந்நிதிக்கு வரும்போது எல்லா வேதங்களின் சாரம் இதுதான் என்று காட்டும் படியாக தோடகசந்தத்தில் ஒரு சாத்திரத்தைச் சொல்லிக்கொண்டே வந்தார், இதற்குத்தான் வேதசாரசமுத்தாரணம் என்று பெயர். இந்த நூலைச் செய்ததினால் இவருக்குத் தோடகாசிரியர் என்று ஒரு பெயருண்டாயிற்று. 'இந்த நூலைப் பார்த்து படித்தவர்கள் எல்லாம் ஆச்சரியத்தையும் பயத்தையும், அன்பையும் அடைந்தார்கள். இதனாலே இந்த நூலின் பெருமை இன்னதென்று நன்குவிளங்கும். சுருக்கமாய் இந்த நூலைப்படித்தால் சர்வமும் எதைச் சொல்லுகின்றனவோ யென்றமயக்கம் போய்விடும். இதில் அனேக மதங்களும் அவரவர் கொண்ட மோக்ஷசாதனங்களும் தெளிவாய்க் கூறப்பட்டுள்ளன. இந்நூல் வடமொழியில் இருந்து திருக்களர் மடாலயம் மடாதிபதி நியாயசந்திர வேதாந்த பாஸ்கர ஸ்ரீ வீரசுப்பைய ஞான தேசிகேந்திரவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு இதற்கு திருவண்ணாமலை ஈசானியமடம் ஸ்ரீமத் சி. சுப்பையசுவாமியவர்களால் வடமொழியிலுள்ள தெளிவானதோர் உரையைத் தமிழில் விளக்கமாய் எழுதவும் பட்டிருக்கின்றது. ஒவ்வொருவர் கையிலும் அவசியம் இருக்கவேண்டியது.

இதன் விலை அணா 10. நமது சந்தாநேயர்களுக்கு அணா 8.

பத்மாசனி

(இது ஓர் அதிசயமான துப்பறியும் கன்னிகை.)

இதில் கூறப்பட்ட கள்ளர்களுடைய சாமர்த்தியங்களும், கதாநாயகி, தன் அபாரமான துப்பறியும் சாமர்த்தியத்தாலும், தைரியத்தாலும, அக்கள்ளருடைய குற்றங்களை ரூபிக்க ருசுக்கள் கண்டு பிடித்து அவர்களது துர் எண்ணங்களை நிறைவேறவொட்டாமல் தடுப்பதும் ஒரு நிரபராதியின் மேல் வந்த அபாண்டமான கொலைக் குற்றத்தை ருசுப்படுத்தி அவனைச் சிறை மீட்பதும்தனது சிற்றப்பன் தன்னை வஞ்சித்து ஏராளமான சொத்தை யபகரிக்கச் செய்த துர்எண்ணங்கள் நிறைவேறவொட்டாமல், தான் அவளது வீட்டிலேயே மாறுவேடம் பூண்டு பணிப்பெண்ணாக அமர்ந்து தனித்து ஜயம் பெறுவதும் படிக்கப் படிக்க ஆனந்தத்தையும் விளைவிக்கும் நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. இதன் விலைஅணா 14.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

சுவர்ணாம்பாள்

அல்லது

பெருவிரல் மர்மம்.

ஓர் அற்புதமான துப்பறியும் நாவல்.

பேராசையானது மிக்க பாபச் செயல்களையும் செய்யத் தூண்டக் கூடிய கொடிய குற்றமென்பதும் முடிவில் அதனால் அவமானமும் இராஜ தண்டனையும் கிடைக்கு மென்பதும் இன்னும் அநேக நீதிகளும்

இதனால் நன்கு விளங்கும். துப்பறிபவன் கதவிற் பட்டிருந்த ஒரு பெருவிரற் குறியின் அடையாளத்தைக்கொண்டு குற்றவாளியைக் கண்டு பிடிப்பதில் அவனுடைய சூட்சும அறிவும் சாமர்த்தியமும் தைரியமும் நன்றாய் விளங்கும். இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

புதிய **மங்கையர் பகட்டு.** நாவல்

“ சுந்தராங்கி ” என்னும் புஸ்தகத்தை இயற்றிய வடுவூர். K. துரைசாமி அய்யங்கார்பி.எ., இயற்றியது. இதுமிகவும் சுலபமான அழகிய அகவல் நடையில் புதுமாதிரியாக எழுதப்பெற்ற தமிழ்ப் புஸ்தகம். கதை பெரிதும் இன்பகரமானது. நம்முடைய தமிழ்ப்பாஷையின் அருமைபெருமைகளையும், அது தற்கால நாகரிகத்திற் கேற்ப எவ்வளவு எவ்விதமாக உபயோகப்படுத்தற் பாலதென்பதைப் பற்றியும், அறிய விரும்புவோரும், நம்முடைய பாஷையை அபிவிருத்தி செய்ய விரும்பிப் பாடுபடுவோரும் இதைப் படித்தல் அவசியமான விஷயம். இதைப்படிப்போர் மனதில் நற்குண நல்லொழுக்கம் நன்றாய்ப் பதிவதோடு தமிழ்பாஷையை மேல் மேலும் படிக்கவேண்டு மென்னும் ஒருவிதப் பேராவாவும் ஊக்கமும் அவர் மனதிற் குடிகொள்ளும். இந்த நூல் முக்கியமாய்ப் பெண்பாலருக்கு இன்றியமையாத பூஷணம். இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

குணசுந்தரன்.

இது வாசிப்பவர் மனதைக் கரையச் செய்யும் ஒரு துப்பறியும் நாவல்.

கீழ்மக்கள் சாவகாசத்தால் தீமையே யுண்டாகுமென்பது இதனால் நிரூபிக்கப்படுகின்றது. கதாநாயகன் தன் நண்பனுக்குச் செய்யும் உதவிகளுக்குப் பதில் அவன் செய்யும் தந்திரமான தீங்கு அதிக ஆச்சரியமாகவிருக்கும். நிரபராதியான குணசுந்தரன் நன்மை செய்யப்போய் பிராணாபத்தில் சிக்கிக்கொண்டு துயரப்படுதல் மிக்க சோபத்தையே தரும்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'22 வரையில் அணா 10.

கீர்த்திலிங்கன் விலை அணா-8.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் அணா 6.

பீஷ்மவிஜயம் விலை அணா-10.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் அணா 8.

விலாசம் ஆனந்தபோதினிஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

பெரியபுராண வசனம்.

72 சித்திரப்படங்களுடன் விலை ரூபா 2-8-0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-22 வரையில் ரூபா. 2.

ஓர் புதிய] **அமராவதி** [நாவல்

அல்லது

அதிசய மர்மங்கள்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமிமுதலியா ரவர்களால் எழுதப்பட்டது.

இது பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த ஒரு நாவல். ஒருமனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனு யிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம்பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக் கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவா னென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட் டிருக்கிறது. இதிலுள்ள ஒவ்வொரு சம்பவமும் அதியாச்சரியத்தை விளைத்து அடியோடு மனதைக் கவரத்தக்கதே. அசம்பாவிதமெனத் தோன்றும் அனேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். இதில்வரும் முக்கிய பாத்திரங்கள் ஒவ்வொருவருடைய சரித்திரமும் ஒவ்வொரு வியப்பான துப்பறியும் கதையைப்போன்றிருக்கும். சுருங்கக் கூறின் இந்த நாவலை யொரு அதிசயக் களஞ்சியமே யெனலாம்.

நாவலை வாசிப்பதால் பயனடைய விரும்புவோர் இதிலிருந்து பல அரிய நீதிகளையும் புத்திமதிகளையும் நல்ல உலக அனுபவத்தையும் கிரகித்துக் கொள்ளலாகும். நாணயமான கடிதத்தில் அச்சியற்றப் பட்டது.

496 பக்கங்கொண்டது.

இதன் விலை ரூபா. 2. தபால் கூலி பிரத்தியேகம்.

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11'-22 வரையில் ரூ. 1-12-0.

மஞ்சள் அறையின் மர்மம்

அல்லது

அபூர்வ துப்பறியும் சாமர்த்தியம்.

336-பக்கங்கள் கொண்டது.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் வரையப்பட்டது

இதுகாறும் அவரால் வரையப்பட்ட அனேகம் துப்பறியும் நாவல்களையும், இதர துப்பறியும் நாவல்களையும் வாசித்திருப்போர் இத்தகைய மிக்க ஆச்சரியமும் சாமர்த்தியமுமான துப்பறியும் நாவல் இதுகாறும் எழுதப்படவில்லை யென்று எளிதில் உணர்வார்கள். இதில் குற்றம் செய்தவனுடைய சாமார்த்தியச் செயல்களும், குற்றத்தைக் கண்டு பிடிப்பவனுடைய சாமார்த்தியச் செயல்களும் ஒன்றுக்கொன்று இணையற்றன வாகவேயிருக்கும். குற்றம் நடந்த இடத்தின் படங்களும் சேர்க்கப்பட் டிருக்கின்றன. காகித விலையால் சொல்ப பிரதிகளே அச்சிடப்பட்டன. விலை ரூ. 1—8—0

ஆனந்தபோதினி சந்தாதாரருக்கு 30-11-'22 வரையில் ரூ. 1-4-0.

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

உ
ஓம்
பரப்பிரஹ்மணே நம:

ஆனந்தபோதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு "—திருவள்ளுவர்.

(ALL RIGHTS RESERVED.)

தொகுதி	துந்துபிஸு ஐப்பசிமீ கஉ	பகுதி
8	1922ஸு அக்டோபர்மீ 17உ	4

கடவுள் வணக்கம்.

எவ்வு யிர்த்திரளு முலகி லென்னுயி
ரெனக்கு ழைந்துருகி நன்மையாய்
இதமு ரைப்பவென தென்ற யாவையு
மெடுத்தெ றிந்துமத யானைபோல்
கவ்வை யற்றநடை பயில வன்பரடி
கண்ட தேயருளின் வடிவமாக்
கண்ட யாவையு மகண்ட மென்னவிரு
கைகு வித்துமலர் தூவியே
பவ்வ வெண்டிரை கொடுத்த தண்டரளம்
விழியு திர்ப்பமொழி குளறியே
பாடி யாடியு ளுடைந்து டைந்தெழுது
பாவை யொத்தசைத லின்றியே
திவ்ய வன்புருவ மாகி யன்பரொடு
மின்ப வீட்டினி லிருப்பனோ
தெரிவ தற்கரிய பிரம மேயமல
சிற்சு கோதய விலாசமே.

அருள்வடி வேழு மூர்த்த மவைகள்சோ பான மென்றே
சுருதிசொல் லியவாற் றாலே தொழுந்தெய்வ மெல்லா மொன்றே
மருளெனக் கில்லை முன்பின் வருநெறிக் கைவ முந்தத்
தெருளின்முன் னிலையா முன்னைச் சேர்ந்தியான் றெளிகின்றேனே.

வாத னைப்பழக் கத்தினுன் மனமந்த மனத்தால்
ஓத வர்திடு முறையுரைப் படிதொழி லுளவாம்
ஏத மம்மனம் மாயையென் றிடிற்கண்ட வெல்லாம்
ஆத ரம்செயாப் பொய்யதற் கையமுண் டாமோ.

அரும் பொருள் விளக்கம்

நைந்துருகி:—(பிற உயிர் துன்புறும் போது அதைச் சகியாது) மனங் கசிந்து இரங்கி

எனதென்ற யாவையும் மதயானைபோல் எடுத்தெறிந்து = மதம் பிடித்த யானை தனக்கு எதிர்ப்படும் எதையும், நல்லது, கெட்டது, நமக்கு அநுகூலமானது, பிரதி கூலமானது என்ற வித்தியாசம் பாராமல் அலட்சியமாய் எடுத்தெறிவதுபோல், எனது என்று கருதும் புறப்பற்றாகிய எல்லாவற்றிலும் பற்றொழிந்து

அன்பாடிகண்டதே அருளின்வடிவமா = (உன்) அன்பர்களைக் கண்டால் (உன்) அருள் வடிவமாகவே பாவித்து

கண்டயா...கைகுவித்து = காணும் எல்லாவஸ்துக்களும் நினது அகண்டாகார சொரூபமே யென்று நிச்சயித்து வணங்கி

இம்மகானே "திருவருள் விலாசப் பரசிவவணக்கம்" முதல் பாசுரத்தினிறுதியில் "கண்டன வெலாமோன வுருவெளியதாகவே கருதியஞ் சலிசெய்குவாம்" என்றருளினார்

பவ்வவெண்டிரை...திவ்யவன்புருவமாகி = பக்திப்பெருக்கால் கண்களில் முத்துப்போன்ற நீர் துளிப்ப, உரோமம் சிலிர்ப்ப மொழிகுழற மனம் அனலிலிட்ட மெழுகுபோலுருகி மெய்ம்மறந்து நிவாததீபம் போலும் சித்திரப் பாவைபோலும் அசைவற்று அன்பே யுருவாகி—இது ஞாதுருஞேயங்கள் என்ற தன்மை முன்னிலையற்று அருள்வயப்பட்டு அன்புருவாய், ஆனந்தமயமாய் விளங்கும் நிலையாகும்

இம்மகானே இந்த இன்பநிலையைப் பலவமயங்களில் பலவாறுவிளக்கியிருக்கிறார்; இது பக்திப்பெருக்கால் அனுபவித் தறியத்தக்கது

மனதையடக்கி ஒரேயிடத்தில் நிலைக்கச் செய்வதற்கு பக்தி சிறந்த மார்க்கமாகும். ஈசுவரனிடத்தில் அனன்னிய பக்தியுடையோர்க்கு மனம் எளிதில் வயப்பட்டு ஒடுங்கும். மனம் அசைவற்று நிற்கும் நிலைக்கு, அலையிலாத சாகரம், காற்றிலாவிடத்து அசையாது நிற்கும் (நிவாத) தீபம், அல்லது சித்திரதீபம், சுவரில் எழுதப்பட்ட பதுமை முதலியவை திருட்டாந்தங்களாகும்.

2. 'அருள்வடி வேழுமூர்த்தம்'—என்றது, சுத்தவித்தை, ஈச்சுரம், சதாசிவம், விந்து, நாதம், சத்தி, சிவம் ஆகிய ஏழும் ஈசுவரனுடைய அருள் உருவங்களேயாகும் என்பதாம்

சோபானம்—படிகள்

மருள், எனக்கில்லை = இவ்விஷயத்தில் எனக்குச் சற்றும் மயக்கமில்லை

எச்சமயத்தார் பாவனைசெய்யும் கடவுள் சொரூபமும் மேற்கூறப்பட்ட ஏழில் அடங்குமாதலால் எல்லாச் சமயத்தார்களாலும் தொழப்படுகின்ற கடவுள் ஒருவரே யென்பது வேதசம்மதம். ஒவ்வொரு சமயமும் கடவுளை யடைய ஏற்பட்ட ஒவ்வொரு மார்க்கமேயாகும். எல்லாச் சமயங்களாலும் பிரதிபாதிக்கப்பட்ட கடவுள் ஒருவரேயாதலின் மதாதீதரான அவருக்கு எல்லாச் சமயங்களும் ஒன்றே. அவருக்கு விருப்பு வெறுப்பு இரண்டு மில்லை. ஒரு மனிதனை அவன் மனைவி கணவரே என்றும், புத்திரன் அப்பா என்றும், தம்பி அண்ணா என்றும், மைத்துனன் மாமா என்றும், வேலைக்காரன் எஜமானே என்றும் பலபேர் பலமாதிரி யழைத்தாலும் எல்லாருக்கும் அவன் "ஏன்" என்கிறானேயன்றி, ஒருவர் கூப்பிடுவதில் விருப்பும் இன்னொருவர் கூப்பிடுவதில் வெறுப்பும் அவனுக்கில்லை—இவ்வாறே கடவுளும். அவர் ஆன்மாவின் பரிபக்குவத்தைக்கண்டு தம்மில் சேர்த்துக் கொள்வதாகிய முத்திப்பேற்றை யளிப்பவரே யன்றி, மதத்தையும் ஜாதியையும் கருதி யளிப்பவரல்ல—அப்படிச் செய்பவராயின் அவர் கடவுள் பதவிக்கு அருகராகார். ஏனெனில் தமக்கு விருப்பமில்லாத ஒரு மதத்தை நிலைத்திருக்கச்செய்து அதில் மானிடரை ஜனிக்கச்செய்து பிறகு அவர்களுக்கு முத்தியளிக்கே னென்பாராயின் அவரையும் கருணாநிதி, ஞானசொரூபன், சர்வசக்தன் என்று யாரே நம்புவர் ?

3. "வாதனைப் பழக்கத்தால் மனம்" —என்றது, பூர்வ ஜன்மத்தில் செய்த வினைகளாகிய பிராரப்தத்தை யிச்சன்மத்தில் அனுபவிக்க வேண்டுமாதலின், அவ்வினைகளில் சம்பந்தப்பட்ட உலக விஷயங்களின் பிராரத்வ வாதனைப் பழக்கமே மனம் என்பதாம்

மனத்தால் ஓதவந்திடும் உரை:—மனதின் சிந்தனையை வாக்கால் வெளியிடுவதே உரை என்பதாம்

உரைப்படி தொழிலுளவாம் — வெளிவந்த உரைப்படி தொழில் ஏற்படுகிறது

"நாம் மனம்வாக்குக் காயங்களாலேயே கர்மங்களைச் செய்கின்றோம். மேலேகூறியபடி பிராரத்வ வாதனைப் பழக்கமே மனமாகவும் அம்மனதின் சிந்தனையை வெளியிடலால் வாக்கு என்ற உரையும், அவ்வுரைப்படி காயத்தால் தொழிலும் நிகழ்கின்றன. இதனால் மனமே கன்மத்திற்கு ஆதிகாரணமென விளங்கும். அத்தகைய மனமே மாயையெனின், பிரத்தியட்சமாய் உலகில் காணப்படும் நாமரூபப் பொருள்கள் யாவும் உண்மையறிந்தோர் விரும்பத்தகாத மித்தையே என்பதில் சந்தேகமேயில்லை" என்பதாம்.

ஆனந்தபோதினி

துந்துபி௵ ஐப்பசி௴ கூ

கடவுளுக்கு மனைவி யுண்டோ?

அநாதி நித்தியமானதும் சத்தியத்தையே யஸ்திவாரமாக வுடையதும், மதாதீதயானதுமாகிய நமது வேதத்தில் கடவுள் இலக்ஷணத்தைக் கூறும்போது, கடவுள் ஏகம், நித்தியம், நிட்களம், சச்சிதானந்தம் என்பது முதலிய பல இலக்ஷணங்கள் கூறப்பட்டிருப்பதோடு, அவர் ஆதியந்த மற்றவர், நாமம் ரூபம் இல்லாதவர், குறி குணங்களற்றவர், எங்கும் நிறைந்தவர், அவர், ரூபம் அரூபம், ரூபாரூபம், ஆண், பெண், அலி ஆகிய இவற்றில் எதுவுமல்லவென்றும், அவரை இன்ன குறியுடையவர், இன்ன நிறமுடையவர், இப்படிப்பட்டவர் என்று ஒருவராலும் கூறமுடியாதென்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது. அவர் அருளைப்பெற்ற மகான்களும், அவரை யொருவரும் கண்டதில்லை யென்றும், அதுவானால் அதுவாவர் அதுவே சொல்லும் என்றும், இவ்வண்ணன் இவ்வுருவன் இப்படித்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே யென்றும் கூறிப் போந்தனர்.

அப்படி யிருக்க நமது புராண இதிகாசாதிகளில் சிவனுக்குப் பார்வதி யென்றும், விஷ்ணுவுக்கு இலக்குமி யென்றும், பிரம்மாவுக்கு சரஸ்வதி யென்றும், இவ்வாறே சுப்பிரமணியராதி யேனைய கடவுட் சொரூபங்களுக்கும் மனைவியருண்டென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இதை யொரு காரணமாகக்கொண்டு நமது மதத்தினரை வஞ்சித்துத் தம் மதத்திற்கு இழுக்க முயலும் அன்னிய மதத்தவர்கள் இதன் உண்மையையறியாமலும், சிலர் அறிந்திருந்தும் நம்மவரிற் பாமரரை வஞ்சிக்க வெண்ணி அதை மறைத்தும், "உங்கள் சிவன் விஷ்ணு முதலிய தெய்வங்கள் சாதாரண மனிதரைப் போலவே

மனைவியரை வைத்துக்கொண் டிருக்கிறார்களே. அப்படிப்பட்டவர்களெல்லாம் தெய்வமாவார்களா? கடவுள் பரிசுத்தமானவரல்லவா..." என்று கூறி நம்மவர் மனதைக் கலங்கச் செய்கிறார்கள். மதசாத்திர ஆராய்ச்சி யில்லாத நம்மவரில் பாமரர்கள் "ஆமாண்டா—இவர் கூறுவது சரிதான்—தெய்வத்துக்குக்கூட நம்மாட்டமே பொண்டாட்டி யிருந்தா அதின்ன தெய்வம்" என்று மிரண்டு விடுகிறார்கள்.

187441

இவ்வாற்றால் தம் மதத்தின் பெருமையை யறியாத இவர்களுக்குத் தங்கள் மதத்தில் குற்றமும், வெறுப்பும் உண்டாகச் செய்து பிறகு வேறுவித ஆசைகளைக் காட்டிச் சுலபமாய் மயக்கித் தம் மதத்தில் சேர்த்துக் கொள்கிறார்கள். நமது மதத்தைச் சேர்ந்த சந்தாநேயரில் ஒருவர் "பெண்ணாசையை யொழித்தாலன்றி மோக்ஷம் கிட்டாதென்று கூறுகிறார்களே, சிவன் விஷ்ணு முதலியவர்களுக்கே மனைவிக ளிருக்கிறார்களே, அவர்களுக்கு அதனால் பாபமில்லையா? இச்சந்தேகத்தைத் தயவுசெய்து நிவர்த்திக்க வேண்டும்" என்று எழுதுகிறார். அதனாலேயே நாம் இதை வரைய நேர்ந்தது.

சாதாரணமாகவே சற்று அறிவை யூன்றி யாராயப்புகின் இதன் உண்மை ஒருவாறு விளங்கும். எவ்வாறெனின், சிவத்தின் மனைவியாகிய பார்வதி அவர் தேகத்திலேயே பாதிபாகமாக விருக்கிறாள் என்று கூறப்பட் டிருக்கிறது. இதனால் புருடன் மனைவி யென்பது சொன் மாத்திரமே யன்றி உண்மையில் உருவம் ஒன்றே யென்பது எளிதில் புலப்படும். இவ்வாறே விஷ்ணுவும் தமது மனைவியாகிய இலக்குமியை மார்பிலேயே வைத்துக்கொண் டிருக்கிறார் என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலும் பிரம்மாவோ சரஸ்வதியை நாக்கில் வைத்துக்கொண் டிருக்கிறார் என்று கூறப்படுகிறது. பாபம் அவர் சாப்பிடும்போது மிக்க ஜாக்கிரதையாக விருக்கவேண்டும். இன்றேல் தமது மனைவியையும் பதார்த்தத்தோடு சேர்த்து மென்று விழுங்கிவிட நேரிடும். இவர்களெல்லாம் ஒருபக்க மிருக்கட்டும். மனைவி யில்லாதவரென்று பிரசித்தி பெற்ற விநாயகருக்கும் சித்தி புத்தி என்று இரண்டு மனைவிகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள்.

அந்தோ இவற்றை யெல்லாம் அறிவைக்கொண்டு சிந்திக்கின் வெளிப்படையாகத் தோன்றும் அர்த்தமே உண்மையான அர்த்த

மல்ல வென்றும், இவற்றில் ஏதோ ஆழ்ந்த பொருள் மறைப்பட்டிருக்கிற தென்றும், ஏதோ சில சூக்குமப்பொருள்கள் இவ்வாறு ஸ்தூலமாக உருவகப்படுத்தப்பட்டிருக்கின்றன வென்றும் நன்கு உணரலாம். "அப்படிச் செய்வதற்கு ஏதேனும் அவசியமும் ஆதாரமுமிருக்கின்றனவா? இதனால் நன்மையேதேனுமுண்டா?" எனின், அவ்வாறின்றி நம் முன்னோராகிய மகான்கள் இவற்றை யங்கீகரித்திரார்கள்.

ஸ்தூலமான காரியத்தைக் கொண்டே சூக்குமமான காரியத்தை யறியவேண்டி யிருக்கிறது. கடவுள், ஆன்மா இவற்றின் சம்பந்தம் முதலிய ஆன்மார்த்த விஷயங்க ளெல்லாம் சூக்குமமானவை. இவற்றை விளங்கச்செய்ய வேண்டுமாயின் ஸ்தூல திருட்டாந்தங்களைக் கொண்டே தெளிவுறச் செய்யவேண்டும். இனி யிவற்றிலடங்கியுள்ள உண்மை யென்ன? இவை யெந்தச் சூக்கும விஷயங்களை விளங்கச் செய்கின்றன என்று பார்ப்போம்.

உலகில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட மனிதர்களில் ஒரு பேதமும் இல்லை. அவ்வாறே ஊர்வன, பறப்பன, விலங்குகள் முதலிய யாவற்றிலும் ஒவ்வொரு இனத்திலும் சிருட்டியில் பேதமின்றி ஒரேமாதிரி யிருக்கக் காணலாம். எல்லா மனிதருடைய அங்கங்களும் ஒரே மாதிரிதான்—அப்படியே எல்லாவற்றிலும். ஆனால் சிருட்டியில் ஆண் பெண் என்ற இரண்டு பேதம் மட்டும் ஒவ்வொரு ஜீவராசியிலும் இருக்கக் காணலாம். இது தவிர கடவுள் சிருட்டியில் வேறு பேதமில்லை. மற்றபடி இடபேதத்தால் நிறபேதமும், மனிதனால் ஜாதிபேதம் முதலியவைகளும் உண்டாயின. இந்த ஆண்பால் பெண்பால் பேதம் மட்டும் எல்லாச் சீவராசிகளிலும் உண்டு. தாவரங்களில்கூட சிலவற்றிற்கு அப்பேதம் இருப்பதாகவே தெரிகிறது. திருட்டாந்தமாய் பனைமரத்தில் ஆண்பனை பெண்பனை யுண்டு.

இவற்றில் விர்த்தியுண்டாவது பெண்பாலிடத்திலேயே. தாவரங்களுக்கெல்லாம் வித்து ஆண்பாலுக்குச் சமதையாக விருந்தாலும் பூமி பெண்பாலாக விருக்கிறது. இதனால் சிருஷ்டிக்கு ஆண் சக்தி யொன்றும், பெண் சக்தி யொன்றுமாகிய இரண்டு சக்திகள் வேண்டும் எனத்தெரிகிறது. ஆண் சக்தி வித்துப் போன்றது; பெண் சக்தி பூமியைப் போன்றது. ஒரு சிறு விதையில் வேர் முதல் கிளை இலை பூ பிஞ்சு முதலிய யாவும் சூக்குமமாய்

அடங்கியிருந்தாலும், பூமியின் சேர்க்கையின்றி அது வெளிவராது. இதில் * இன்னொரு விசேடமிருக்கிறது. விதை தனியாய் வியாபகமாய்த் தோன்றிக்கொண் டிருக்கும் வரையில் அதிலிருந்து உற்பத்தி காணப்படுவதில்லை. அது பூமியில் வியாப்பியமாய் விடவேண்டும்; அதாவது மறைக்கப்பட வேண்டும்; பிறகே அதினின்றும் உற்பத்தி தோன்றுகிறது.

இப்போது ஆண்பால் பெண்பாலாகிய இருவிதச் சக்திகளே சிருஷ்டிக்குக் காரணம் என்றறிகிறோம். இவ்வாறே தோற்றிக்கொண் டிருக்கும் இப்பிரபஞ்ச சிருஷ்டிக்கும் இரண்டுவித சக்திகள் காரணமாக விருக்கின்றன. ஒன்று பிரம்மம், மற்றொன்று அதனிடம் அக்கினியிற் சூடுபோல் பிரிபடாதிருக்கும் அபின்ன சத்தி. இதற்குப் பரையென்றும் பெயர். இந்த இரண்டையுமே சிவமும் சத்தியும் என்பது. பிரம்மம் அச்சத்தியைத் தனக்குள் அடக்கிக்கொண்டு தான் மாத்திரம் வியாபகமா யிருக்கும்போது ஜகத் சிருஷ்டியில்லை. அச்சத்தி விசிரிம்பித்து பிரம்மம் அப்பராசத்தியின் வியாபகத்தில் (வியாப்பியமாக) இருக்கும்போதுதான் சிருட்டி யுண்டாகிறது. இச்சக்தியையே யருட் சக்தியென்றும் கூறப்படுகிறது. ஈசுவரனுடைய சிருட்டித் தொழிலுக்குக் கருணையே காரணம். ஜீவர்களிடத்துள்ள கருணையால் அவர்கள் மோக்ஷ மடைவதற்காகத் தனுகரண புவனபோகங்களைப் படைத்தளிக்கிறார். பிரம்மம் கிரியை யற்றது. சலன மற்றது. சத்தியின் அம்சத்திலேயே பஞ்ச கிருத்தியங்களும் நடை பெறுகின்றன. இச்சத்தியையே பெண்பாலாக உருவகப்படுத்தி யிருக்கிறது. மோக்ஷமடைதற்கு ஈசுவரன் அருளே காரணம். மாணிக்க வாசகரும் "அவனருளாலே யவன்றாள் வணங்கி" என்று கூறினார். இக்காரணத்தாலேயே ஈசுவரனைத் துதிக்கும் மகான்கள் (சமயாசாரியர் ஆழ்வாராதியர் முதல்) அனைவரும் அம்மையாரையும் சேர்த்தே துதித்திருக்கிறார்கள். இக்காரணம் பற்றியே சாத்தேயர் (சக்தியை யுபாசிப்போர்) மோக்ஷமடையச்சத்தியே பிரதானம் என்கிறார்கள். எல்லா தேவதா சொரூபங்களும் சக்தியின்

* **வியாபக வியாப்பியம்—பொடியும் டப்பியும் போல் ஒன்றுக்குள் ஒன்று அடங்கி யிருக்கும் பொருள்களுக்கு வியாபக வியாப்பிய சம்பந்தமுண்டு. டப்பி வியாபகம்—பொடி வியாப்பியம்—குடசலத்தில் குடம் வியாபகம் ஜலம் வியாப்பியம்.**

அம்சமேயாகும். நம் தேகத்திலுள்ள எலும்பு முதலிய கடின பதார்த்தங்கள் சிவத்தின் அம்சமும், உதிரம் மாமிசம் முதலியவை சத்தியின் அம்சமும் ஆகும்.

மனதை யடக்கி வயப்படுத்தவும், பக்தி பெருகி ஈசுவர னுடைய அருளைப் பெறவும் சொரூப உபாசனை அவசியமான தாக விருக்கிறது. அந்தந்த சொரூபங்களுக்குரிய சக்திகளையே மனைவியர் என்று உருவகப்படுத்தி யிருக்கிறது. இன்னும் அந்தந்தக் கடவுளருக்குரிய வாகனங்கள் ஆயுதங்கள் நிறம் முதலிய யாவும் அவர்கள் சத்திகளையும் இலக்ஷணங்களையுமே குறிக்கின்றன.

உலகில் மாந்தர்களில் எல்லாருமே தீவிரதர அதிகாரிகளல்ல. மந்த அதிகாரிகளும் படிப்படியாய்ச் சாதனங்களை யடைந்து ஞானமடையும் பக்குவிகளாவதற்கு இவ்வித சரியை கிரியை முதலிய மார்க்கங்கள் அத்தியாவசியம் வேண்டியவைகளே. சிறு பாலருக்குத் தின்பண்டங்களில் ஔடதத்தை மறைத்துவைத் தளித்து அவர்கள் பிணிகளைப் போக்கும் கருணையாந் தாய்போல், மந்த அதிகாரிகளும் ஞான மடையுமாறு சரித்திரரூபமான புராண அர்த்தங்களில் உயர்வான தத்துவக் கருத்துகள் அடக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. இவற்றை யாராய்ச்சி செய்வதால் அவரவர்களின் பக்குவத்திற்குத் தக்கபடி, சிலர் பக்தியோடு செய்யும் புராண படனத்தால் சித்த சுத்தி பெற்று பக்திமான்களாகிறார்கள்; சிலர் சரியை கிரியைகளில் முயன்று பக்தி ஜனித்து மேல் படிக்குச் செல்கிறார்கள். தீவிர, தீவிரதரபக்குவ முடைய அதிகாரிகள் உட்கருத்துகளை யுணர்ந்து தத்துவ ஆராய்ச்சிசெய்து ஞான மடைகிறார்கள்.

இக்காரணங்களால் சிவன் விஷ்ணு முதலியவர்களுக்கு மனைவியர் என்று கூறியிருப்பது அவர்கள் சத்திகளையே யன்றி வேறில்லை யென்றும், ஆகையால் அவர்கள் மனைவியரை வைத்துக் கொண்டு சிற்றின்பத்தை யனுபவிக்கிறார்கள் என்று கருதுவது அறிவின்மை யென்று உணரவேண்டும். நமது மதத்தைப்பற்றிய இத்தகைய உண்மைகளை நம்மவரில் பாமரரா யிருப்பவர்களுக்கெல்லாம் போதித்து அவர்கள் பிறமதத்தினருடைய சொற்களுக்கு மயங்கா வண்ணம் செய்ய வேண்டியது அறிவாளிகளின் கடமையாகும்.

இவ்வாறே நம்மவரைத் தம்மதத்திற்கு இழுக்க முயலும் கிருஸ்துவர்கள் இன்னொரு பொய்க்கூற்று கூறி நமது பாமரர்களை யேமாற்றுகிறார்கள்.

அதாவது "ஹிந்துக்களுக்குப் பல தெய்வங்கள் இருக்கின்றன" என்பதே. உண்மையில் கடவுள் ஏகம்-ஒருவரே - என்ற விஷயம் வேதத்தில் பூரணமாய்த் தெளிவாய்க் கூறப்பட் டிருக்கிறது. நாம் எல்லா சொரூபங்களையும் ஒரே கடவுளின் பல சொரூபங்களாகக் கருதுகிறோமே யன்றிக் கடவுள் ஒன்றுக்குமேலிருப்பதாகக் கருதுவதில்லை. எல்லாம் அவருடைய சொரூபங்களே. உள்ளும் புறம்புமாய் யாவற்றிலும் எங்கணும் அவரே நிறைந்திருக்கிறார் என்ற உண்மையை யனுபவமாகக் காட்டக் கூடியது நமது மார்க்கம். ஒரே கடவுளே தொழில் பேதத்தால் மும்மூர்த்திகளாக விவகரிக்கப்படுகிறார் என்றும், மூவுருவங்களும் ஓருருவே என்றும் தெளிவாய்க் கூறப்பட்டிருக்கிறது.

நம்மவர் இவ்வுண்மைகளை யுணர்ந்து வீணே பிறமதத்தவர் போதனையால் மயங்கி இடர்ப்படாவண்ணம் எச்சரிக்கை யடையப் பிரார்த்திக்கிறோம். நமக்கு யாவற்றிலும் ஆன்மார்த்தமே பிரதானமானதென்ற உண்மையை யுணர்ந்த அறிவாளிகள் இவ்விஷயத்தில் சிரத்தை யெடுத்துக்கொண்டு ஆங்காங்கு இத்தகைய விஷயங்களை நம்மவர்க்குத் தெளிவாயெடுத்துரைக்க வேண்டிக் கொள்கிறோம்.

ஓம் தத் ஸத்.

தமிழ் நாடகம்.

தமிழ்நாட்டில் முத்தமிழ் என்று மொழிவது வழக்காயினும் நாடகத் தமிழ் காண்பது அரிது. இயற்றமிழ் நூல்கள் பல மலிந்துள்ளன: நாடோறும் வெளிவருவன (செய்யுளும் வசனமும்) இயலே; இசையும் சிறுபான்மை யாங்காங்கு வெளிவருகின்றது. பண்டைய நூல்களுள்ளும் ஆங்காங்குக் காணப் பெறுகின்றது. ஆனால் நாடகம்மட்டும் பெயரளவாய் நின்றதே யன்றி மேலொன்றுமின்று.

ஆனால் நாடகநூல் தமிழில் கிடையாது என்று கூறுதல் கூடாது. தொல்காப்பியர் தமது இலக்கணம் வகுக்குங் காலத்துக்கு முன்னரே பல நாடகங்கள் உண்மை புலப்படும். அவர் மெய்ப்பாட்டியலும் சிறுபான்மை உவமவியலும் பொருளதிகாரத்துள் வகுத்தது, அரங்கினடாத்து முறைமையினைத் தழுவியே. நாடகத்துக்கு முதற்கருவியாகிய பாவனையே மெய்யில் அவ்வப்பொழுது தோன்றும் விகற்பமாக அவர் விவரித்தனர். தொல்காப்பியத்துக்கு முதனூலாகிய அகத்தியம் என்னு மிலக்கணம், இயல் இசை நாடகமென்ற மூவகைப் பிரிவினை நுதலியதென்று கூறுப. ஆயின் அகத்தியம் ஒரு சிறிதும் கிடைப்பதரிது; ஆகலின்யாம் ஒன்றாக் துணிதலியலாது

பண்டைய நூற்களுள் நமக்குக் கிடைத்தவற்றில் சிலப்பதிகாரம் * ஒன்றுமே நாடகப்போக்கைத் தழுவியது. அதன்கண் அக்காலத்தார் நாடகத்தின் தன்மை ஒருவாறு விளங்கும். ஆசிரியர் இளங்கோவடிகள் காலத்தில் பலவகைக் கூத்துக்கள் வழக்காற்றில் இருந்ததும் புலனாம். ஆய்ச்சியர் குரவையில், அவர் "மண்ணின் மாதர்க்கணியாகிய கண்ணகியுந் தான் காண ஆயர்பாடியி லெருமன்றத்து மாயவனுடன் தம்முனாடிய வாலசரிதை நாடகங்களில் "வேனெடுங்கண் பிஞ்ஞையோடாடிய குரவையாடுதும்" என்றதும், பிறாண்டும் பற்பலவாறு கூறுவதும் கவனிக்கற்பாலது.

அவருக்குப் பின் நாடகநூல் வழக்காறற்றுப் போயிற்றாகும். சிந்தாமணி, சூளாமணி, உதையணன் கதை, இராமாயணம் முதலிய காவியங்கள் தோன்றினவேயன்றி நாடகநூல் ஒன்றேனுந் தோன்றிலது; அன்றியும் பண்டைய நாடக இலக்கணங்கள் (முறுவல், சயந்தம், மதிவாணர் நாடகத் தமிழ்நூல் முதலாயின) மறைவதாயின.

உத்தரகாண்ட முடையார்க்குப் பின்பட்ட ஆசிரியர் அடியார்க்கு நல்லாரும் "இசைத் தமிழ்நூல் பல இறந்தன" என்றார். "இனி, இசைத்தமிழ் நூலாகிய பெருநாரை பெருங் குருகும் பிறவும், தேவஇருடி நாரதன் செய்த பஞ்சபாரதீய முதலாவுள்ள தொன்னூல்களுமிறந்தன. நாடகத்தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாவுள்ள தொன்னூல்களு மிறந்தன. பின்னும் முறுவல் சயந்தம் துணநூல் செயிற்றிய மென்பனவற்றுள்ளும் ஒருசார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதல் நடு இறுதி காணாமையின் அவையு மிறந்தனபோலும்; இனி, இறக்கவே வரும், பெருங்கல முதலிய பிறவுமாம்" † என்பது காணவும் வருந்துகிறது.

நாடகத்துக்குடன்பட்ட நாட்டியமும் தாழ்வடைந்து நிற்கின்றது. மேல் இறந்து பட்டவாறு கூறியவற்றுள் பரதசாஸ்திரத்தை முறைப்படுத்துவன சில. தற்காலத்தில் பரதநாட்டியம் பெரும்பாலும் இழிந்த நிலைமையில் இரண்டோரிடங்களில் நடாத்துவது காணலாம். அதனைக் குறித்த இரண்டொரு நூலுந் தவிர வேறொன்றுங் காண்பதரிதாயிற்று.

சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னர் இயற்றிய இராம நாடகமே, அத்திமலரெனக் காணப்பெறுகின்றது; தற்போது வழங்கும் நாடகங்களில் மேம்பட்டது. அதன்கண் ஆசிரியர் கல்விவளனும், இயற்கை வளப்பும் பக்திரசமும் ஒன்றுபடக் கனிந்தருளினார். அஃதொன்றே சந்திவீதிகளில் நடாத்துதற்கும், அரங்குகளில் நிறுவுதற்கும் வாய்த்தது. எனினும், நாடகவியலுக்கு அந்நூலும் இழுக்குற்றதென்றே எமது துணிபு. அது நாடகவியலின்றன்மை யாயும்பொழுது நன்கு புலப்படும் என்று கருதுகிறோம்.

'இராம நாடகத்தின் பிற்பட்ட நாடகங்கள் பெரும்பாலும் உதரநிமித்தம் எழுந்தன என்னலாம். இரண்டொன்று சான்றோர்க் கொவ்வாததும், உண்மைக்கு மாறாயதுமாக உள. அரிச்சந்திரவிலாசம், கோவலன் நாடகம், நல்லதங்காள் நாடகம், லலிதாங்கி, சதாரம், டம்பாச்சாரி நாடகம், மற்றும் பல்வகை யிழிந்த சரித்திரங்களும் வெளிவருகின்றன. இவற்றுள் நல்ல நீதிகள் புகல்வன பலவாயினும், அவற்றை யுணராது, மனதிற்கொவ்வாத இரண்டொரு காட்சிகளையும், சம்பாஷணைகளையுமே பெரும்பாலும் விழைகின்றனர். அதன் நிமித்தம், பல்லிடத்தில், முதனூலில் கருத்தைப் பலவாறு திரித்து நாடகங் காண்போர் கண்ணுஞ் செவியுங் களிக்க நடிக்கின்றனர். அந்தோ! இவ்விதஞ் செய்தலின் அன்றோ நாடகங்காண்பது குற்றமென்று கூறலாயிற்று. முற்காலத்தில் நாடகம் பொது அரங்கத்தினும் வேந்தர் சபையினும் நடத்தப்பெற்றுச் சிறப்புடன் விளங்கிற்று. இப்பொழ்தோ..........! இத்தகைய நாடகங்கள் வெளிவருவதினும் ஒன்றேனுமில்லா திருத்தல் மேன்மையெனத் தோன்றுகின்றது.

ஆனால் இடை யிடையே விற்பன்னர் சிலர் அருமையான நாடகங்கள் வெளியிடுகின்றனர். அவற்றுட் பெரும்பாலும் வடமொழி யாங்கில தத்துவங்களையும் நாடகங்களையும் தழுவியன. எனினும், சிற்சில மிகவும் பாராட்டத்தக்கவையாதலின், இன்னுஞ் சில ஆண்டுகட்குள் தமிழ்க்கேயுரிய நூல்கள் வெளிப்போந்து தமிழ்மக்கள் மனதைக்கவரும் என்று விழைகின்றனம். நாடகத்துறையிலேயே மிகவும் பயின்றார், நாடகவியலும் தத்துவமும் நன்கறிந்து பண்புடனியற்றினாராயின், தமிழகத்துக்குக் கழிபேருதவி புரிந்தனராவர். (தொடரும்)

து. தீனதயாளு B. A.

* சிலப்பதிகாரம் ஐம்பெருங் காவியங்களுள் ஒன்று 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' இளங்கோவடிகள் என்பவரியற்றியது. இதற்குப் பண்டைய அரும்பதவுரை யொன்றும், அடியார்க்கு நல்லாரெழுதிய விரிவுரை யொன்றும் உள.

† சிலப் பதிகாரம் அடியார்க்கு நல்லாருரைப்பாயிரம்.

கையெழுத்து

சூத்திரம்.

கட்புல னில்லாக் கடவுளைக் காட்டும்
சட்டகம் போலச் செவிப்புல வொலியை
யுட்கொளற் காமுரு பாம்வடி வெழுத்தே.
என்றமேலோர் கூறியுள்ளார் எனினும்,

பிற பாஷாபிமானம் மேலிட்டுத் தாய்ப்பாஷாபிமானம் இழிட்டுப் படிப்படியாய்த் தேய்ந்து வருமிக் காலத்தில் தமிழ்ப் பாஷாபிமானம் கட்டோடு விட்டவர்போக மற்றவர்களாவது அபிமானம் வைத்துச் சித்திரம் கையெழுத்து விஷயமாய் நமது முன்னோர் தேடி வைத்திருக்கும் மகத்துவமும் பெருமையும் நிலைக்கச் செய்வார்க ளென்று புல்லறிஞன் பேசுவதற்குப் பத்திராசிரியரவர்கள் இடங்கொடுக்க வேண்டுகிறேன்.

அன்பர்களே ! நம்பாரதமாதாவின் "அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு" என்னும் தமிழ்ப்பாஷையின் எழுத்துக்களில் பின்சொல்ல உயிர் மெய் எழுத்துக்களை விட்டு உயிர் 12, மெய் 18, ஆய்தம் 1, இவற்றைப் பற்றிச் சொல்கிறேன்.

நந்தமிழ் எழுத்துக்களை மேனோக்காக நோக்கினும் சுழி, பிறை, கோடு புள்ளி முதலிய சிலபல உருவங்களால் அமைந்திருக்கின்றன என்று மேலோர் யூகித்திருக்கிறார்கள். ஏனெனில் மேற்சொன்ன உருவங்கள் இந்து மத விஷயத்திலும் சம்பந்த முண்டு.

மேற்சொல்லியபடி

1. ஒரு சுழிகலந்தவை, ஞ், ல், வ், ன். ஈ தவிரமற்ற 11. உயிர்களும்
2. இரு சுழி கலந்தது ன்
3. முச்சுழி ,, ண்
4. ஒரு பிறை ,, ஆ. இ. ல்
5. இரு பிறை ,, ஐ. ஒ
6. முப்பிறை ,, ஓ
7. ஒருகோடு ,, உ
8. இருகோடு அ-ஆ-எ-ஞ்-ட்-ண்-ம் வ்-ழ்-ள்-ன்
9. முக்கோடு ஈ. த். ந். ப்.
10. நாற்கோடு ச். ர்.
11. ஐங்கோடு ய.
12. ஒருபுள்ளி. க் முதலியமெய் 18
13. இருபுள்ளி. ஈ.
14. முப்புள்ளி ஃ.

ஆனதுபற்றி வற்புறுத்திய முன்னோர் வெண்பா.

கொம்புசுழி கோணாமல் கொண்டை வண்டி சாயாமல்
அம்புபோல் கால்வாங்கி அசையாமல்—தம்பிநீ
எழுதினால் நலமுண்டு இறுமாந்தே எக்களித்தால்
கழுதையினும் நாயிலுங் கடை.

என்பது போன்றே பின்னோராகிய நமக்கென்று நம் முன்னோர் கஷ்டப்பட்டு எழுதிவைத் திருக்கும் மந்திரம், சாஸ்திரம், வைத்தியம் இதிகாசமுதலிய பனை ஓலைக்கிரந்தங்களை, இன்னும் நாளையும் பார்த்தால் எழுத்துக்களின் சர்வாவயவங்களும் அவர்கள் திட்டம் செய்திருக்குமாறே பிரகாசிக்கின்றன.

இக்காலத்திலும் எழுத்துக்களின் உருவங்களைச் சரியாய் எழுதக்கற்றவர்கள் எவ்வளவுதொடர்ச்சியா யெழுதினும் வாசிப்பவர்க்கு வருத்தமிராது.

அச்சுப் பிரதிகளா யிருப்பினும் ஆழ்ந்த கருத்துடன் வாசிக்கும் பாகங்களில் ஒருவரி அல்லது பதம் எழுத்து எழுத்துக்களின் குறி முதலிய இல்லாவிடினும் தெரியாவிடினும் எவ்வளவோ சங்கடப்பட நேரிடுகின்றது.

சிறு பிள்ளைகள் முதல் யாவரும் இலக்ஷணமா யிருக்கும் பொருள்களைப் பார்க்கப் பிரியப்படுகிறார்களே யன்றி இலக்ஷணம் கெட்டவைகளைப் பார்க்கப் பிரியப் படுகிறார்களில்லை.

சிலர் எழுதும் தபால் கடிதம் முதலிய வற்றை வாசிக்கும் போதும் கிறுக்கெழுத்து முதலிய வற்றால் விஷயபங்கம் நேருமாயின் கையிலிருப்பதையும் எறிய வருகிறது. நமது முன்னோர் சர்வ சத்விஷயங்களிலும் புகழ்ப்பெற்றவர்களா யிருந்திருக்க, அவர்கள் புகழ்ச்சிகளி லொன்றாகிய கையெழுத்தின் புகழை நாம் ஏன் போக்கவேண்டும். கையெழுத்துக்களின் ரூபலாவணியங்களைச் சரியாய்க் கற்பிக்கச் சகல கல்வியாசிரியர்களும் கடமைப்பட்டிருக்க ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே முக்கிய குருக்களாக மதிக்கப் படுகிறார்கள். பிரதமத்தில் இவர்கள் கவனியா விட்டால் "முதற் கோணல் முற்றுங்கோணல்" "தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்னும் பழமையாய் முடிகிறதென்பது யாவருமறிந்த விஷயமே யாதலால், அன்பார்ந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே நேர்க்கோட் டெழுத்துக்களை வளைகோட் டெழுத்துக்களாகவும், வளைகோட்டெழுத்துக்களைக் கோணற் கோட் டெழுத்துக்களாகவும் மூலாதார சுழியுள்ளவைகளைச் சுழியின்றியும் எழுதும் மாணவர்கள் மனம்போனபடியும் கைபோனபடியும் விடாமல் எழுத்துக்களின் சொரூபலக்ஷணங்கள் குறையின்றிப் பூரணசொரூபமாயும் "என் எழுத்து எனக்குத்தான் தெரியும்" என்றபடி கிறுக்கில்லாமல் எழுத்துக்கள் நெருங்கியும் சொற்கள் நெருங்காமலும் எழுதக் கற்பிப்பீர்களாயின் "போனதுபோக" இனியாகிலும் நம் பாரதநாட்டின் கையெழுத்துச் சிறப்பு முன்னுக்கு வரலாமென்று எண்ணுகிறேன்.

" சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
எழுத்தும் சித்திரம் எனப்பெயர் பெறுமே "

நார்த்தம்பட்டி — இலக்ஷ்மண வாத்தியார்,
தலைமை உபாத்தியாயர், குமாரசாமிபட்டி பாடசாலை,
P. O. தருமபுரி, சேலம் ஜில்லா.

அப்பர் சுவாமிகள்.

(ஸ்ரீமான் K. S. ஸ்ரீநிவாசபிள்ளை எழுதியது)

இவர்க்குத் திருநாவுக்கரசு, வாகீசர் என்னும் மறுபெயர்களு முண்டு. கி. பி. ஆறும் நூற்றாண்டின் பிற்பாதியில் நடுநாட்டின் ஒரு பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் அவதரித்தனர். மருள் நீக்கியார் என்பது அவரது பிள்ளைத் திருநாமம். உலக நிலையாமையை உணர்ந்த இவர் அறத்துறந்து ஆருகதமே உண்மை நெறி எனக்கருதி அம்மதத்தைத் தழுவி ஒழுகலாயினர். சமணபள்ளியி லிருக்கும் பாடலி புத்திர மென்னும்

நகரத்தைச்சார்ந்து சமணநூல்களை நன்கு கற்றும், சமணர் பலருக்குக் கற்பித்தும் அவர்களால் மதிக்கப்பெற்று அவர்கள் அளித்த தருமசேனர் என்னும் சிறப்புப் பெயரோடும் வதிந்தனர். பிறகு சூலைநோய் இவரையடைந்து வருத்தியதும், இவர் ஆருகதத்தை விட்டுச் சைவத்தைக் கடைப்பிடித்ததும் யாவருமறிந்தனவே. இவர் சைவமதத்தைத் தழுவிய பின்னர் வதிந்தது திருவதிகை என்னுந் தலத்தில். அக்காலத்தில் திருவதிகை, பாடலிபுத்திரம் முதலிய இடங்கள் காஞ்சியை ராஜதானியாகக் கொண்டிருந்த பல்லவ அரசன் ஆட்சியில் இருந்தன. அவ்வரசன் பெயர் மகேந்திரவர்மன். அவன் ஜைன மதத்தைச் சார்ந்தவன். சமண அடிகள் வேண்டுகோளுக் கிணங்கி அப்பரை நீற்றறையி லிருத்தியவனும், அவர்தலையைக் காலால் இடற யானையை ஏவியவனும், கல்லில் கட்டிக் கடலில் போட்டவனும் இம்மகேந்திரனே. பிறகு தான்செய்தன அனைத்தும் பெருந்தவறென அறிந்து இரங்கித் திருவதிகை சென்று அப்பர் சுவாமிகள் சரணங்களைப் புணையாகக்கொண்டு அவர் திருவருளால் சைவனாயினன். பிந்தி பாடலிபுத்திரத்தி லிருந்த ஜைனப் பள்ளிகளை இடித்துத் திருவதிகையில் சிவபெருமானுக்குத் தன் பெயரால் குணபரேச்சுரம் என்னும் ஆலயமமைத்தான். குணபரன் என்பது மகேந்திரனது சிறப்புப் பெயர்களில் ஒன்று. இப்பொழுது வழங்கும் பெரிய புராணப் பிரதிகளில் அவ்வாலயம் குணதரேச்சுரம் என்று காணப்படுகிறது. மகேந்திரன் கி. பி. 600 முதல்கொண்டு 625—30 வரை ஆட்சி புரிந்தவன். இவனாட்சி முற்பாதியில் இவன் சைவனாயிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. சைவனான பிறகே திருவதிகை, வல்லம், தளவனூர், சீயமங்கலம், பல்லாவரம், திரிசிராப்பள்ளி முதலிய இடங்களில் சிவன் கோயிலும், மகேந்திரவர மென்னும் இடத்தில் விஷ்ணுகோயிலும் இவனால் அமைக்கப்பட்டன. திரிசிராப்பள்ளியில் இவன்காலத்து ஏற்பட்ட கல்வெட்டில் அடியில் கண்ட வரிகள் காணப் படுகின்றன:—அவற்றின் பொருள் "இலிங்கத்தை வழிபடும் குணபரன் என்னும் பெயரோடு கூடிய அரசன் இந்த இலிங்கத்தினால்(பெற்ற) விபட்சவிருத்தியிலிருந்து திரும்பிய ஞானம் உலகத்தில் நீண்டகாலம் நிலைநிற்பதாக" என்பது. விபட்சவிருத்தி என்பது ஜைனமதம்.

இதில் அவ்வரசன் அந்நியமதத்தைப் பற்றியிருந்ததை விட்டுச் சைவனானது சொல்லப்பட்டிருக்கிறது. மேற்கண்ட கோயில்களைக் கட்டுவதற்குப் பல ஆண்டுகள் சென்றிருக்க வேண்டுமாதலால், இவன் ஆட்சி முற்பாதியில் இவன் சைவனாகி யிருக்கலாமென்று சொன்னேன். அஃதாவது கி. பி. 613, 614-ஆம் ஆண்டுகளுக்கு முன்னிருக்கலாம். அப்பர் சுவாமிகள் ஜைன மதத்தைவிட்டுச் சைவமதத்தைப்பற்றியது கி. பி. 610-ம் ஆண்டையொட்டி யிருக்கலாம். பிறகு சுவாமிகள் திருவதிகையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்துகொண்டு பல ஆண்டுகள் இருந்து விட்டனர். மகேந்

திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் நரசிம்மவர்மன் பல்லவர் ஆட்சியை அடைந்தனன். அவன் ஆட்சி கி-பி 630-ஆம் ஆண்டுக்குப் பின்னருமிருந்த தென்பர் புரோபசர் துப்ரில். கி. பி. 640-ஆம் ஆண்டில் யுவான் சுவாங் எனப் பெயரிய சீனதேச யாத்திரிகர் நரசிம்மவர்மன் தலைநகராகிய காஞ்சிக்கு வந்து அங்குச் சிலகாலம் தங்கியிருந்தனர். அவர் பௌத்தர். அக்காலத்தில் காஞ்சி நகரத்தில் புத்தப் பள்ளிகள் நூற்றுக்குமேல் இருந்தனவென்றும், பௌத்த சந்நியாசிகள் பதினாயிரம்பேர் இருந்தனரென்றும், ஜைன ஆலயங்கள் பல இருந்தனவென்றும் அவர் தாமெழுதிய புத்தகத்தில் சொல்லி யிருக்கின்றனர். இவர் காஞ்சிவருதற்கு முன் கன்னோஜ் நகரத்தரசன் ஹர்ஷ வர்த்தனிடத்தில் சிலகாலம் தங்கியிருந்தனர். ஹர்ஷ சரித்திரம் முதலிய எழுதிய பட்டபாணர் என்னும் பிரசித்திபெற்ற வடமொழிப் புலவர் அக்காலத்தில் இருந்தவர். இந்தக் காலமெல்லாம் அப்பர் சுவாமியும் திருவதிகையில் வசித்தகாலம்.

சைவநெறியைத் தழுவிய காலத்து அப்பர் சுவாமிகளுக்கு வயது என்ன என்பதை விசாரிப்போம். சிலரைப்போல் மனைவி, மக்கள் அல்லது மாதா பிதா முதலியவர்களிடத்து உதித்த மனவருத்தத்தினாலாவது, வறுமை, பெண்ணாசைபோன்ற பிற ஹேதுக்களினாலாவது பிற மதத்தையும், சந்நியாசத்தையும் அப்பர் சுவாமிகள் ஏற்றவரன்று. உலகவாழ்வும், ஐம்பொறியின் வாயிலாய் வரும் இன்பமும் நிலையாவென உணர்ந்து உண்மை நெறியையாராய்ந்து கடைப்பிடிக்க வேண்டினவர். அவர் ஜைன நெறியைப் பற்றுவதற்கு முன்செய்த காரியங்கள் இன்ன வென்பதைப் பின்கண்ட செய்யுட்கள் காட்டும். அவை:—

"மாசின்மனத் துயரொழிய மருணீக்கி யார்நிரம்பித்
தேசநெறி நிலையாமை கண்டறங்கள் செய்வாராய்க்
காசினிமேற் புகழ்விளக்க நிதியளித்துக் கருணையினால்
ஆசிலறச் சாலைகளுந் தண்ணீர்ப்பந் தருமமைப்பார்."

"காவளர்த்துங் குளந்தொட்டுங் கடப்பாடு வழுவாமல்
மேவினர்க்கு வேண்டுவன மகிழ்ந்தளித்தும் விருந்தளித்தும்
நாவலர்க்கு வளம்பெருக நல்கியுநா னிலத்துள்ளோர்
யாவருக்குந் தவிராத வீகைவினைத் துறைநின்றார்."

"நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லேனென் றறத்துறந்து சமயங்க ளானவற்றி
னல்லாறு தெரிந்துணர்ந்து நம்பரரு ளாமையினால்
கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார்."

(திருநா—புராணம்) என்பன. இப்பாட்டுக்களிற் கண்டவைற்றைச் செய்யக்காலமும் ஆற்றலும் வேண்டும். எல்லாவற்றையும் யோசிக்க இவர் ஜைனராயின காலத்து இவருக்கு 25 வயதிருந் திருக்கலா மென்று சொன்

வது தவருகா தென்னலாம். இவர் ஜைனரான பின்னர்ச் செய்தன இன்ன வென்பதைப் பின்வரும் செய்யுட்கள் காட்டும். அவை,

" அங்கவரு மமண்சமயத் தருங்கலை நூ லானவெலாம்
பொங்குமுணர் வுறப்பயின்றே யந்நெறியிற் புலன் சிறப்பத்
துங்கமுழு வுடற்சமணர் சூழ்ந்துமகிழ் வாரவர்க்குத்
தங்களின்மே லாந்தரும சேனரெனும் பெயர் கொடுத்தார். "

" அத்துறையின் மீக்கூறு மமைதியினு லகவிடத்திற்
சித்தநெறி யறியாத தேரரையும் வாதின்கண்
உய்த்தவுணர் வினில்வென்றே யுலகின்க ணொளியுடைய
வித்தகரா யமண்சமயத் தலைமையினின் மேம்பட்டார். "

(திருநா—புராணம்.) என்பன.

சமயநூல்களை எல்லாம் நன்காராய்ந்தனர். பிற சமயிகளோடு வாது புரிந்து ஜைனத்தை ஊன்றச் செய்தனர். ஜைனமதத்திற்கே பேரிலக்காய் விளங்கினர். இவர் சைவநெறியைத் தழுவியகாலத்து ஜைனர் தங்கள் சமயம் அத்தோடு ஒழிந்துபோய் விடுமோ என்று பயந்தனர். பின்கண்ட செய்யுட்பகுதிகள் இதை விளக்கும். அவை,

" மருவு நம்பெருஞ் சமயம்வீழ்ந் ததுவென மருள்வார். "

" மலையும் பல்சமயங்களும் வென்றுமற் றவரால்
நிலையும் பெற்றவிந் நெறியினி யழிந்ததென் றழுங்கி. "

" இவ்வ கைப்பல வமணர்கள் துயருட னீண்டி
மெய்வ கைத்திற மறிந்திடில் வேந்தனும் வெகுண்டு
சைவனுகிநம் விருத்தியுந் தவிர்க்குமற் றினிநாஞ்செய்வதென்.

(திருநா—புராணம்.) என்பன.

சைவர்களோ அப்பர் சைவரானதால் தங்கள்மதம் பெரிய வெற்றியை அடைந்ததாகக் கருதி உத்ஸவம் கொண்டாடினர். அது,

" பரசுங்கரு ணைப்பெரி யோனருளப்
பறிபுன்றலை யோர்நெறி பாழ்படவந்
தரசிங்கருள் பெற்றுல குய்ந்ததெனு
நெடியார்புடை சூழ்தி கைப்பதிதான்
முரசம்படகந்துடி தண்ணுமையாழ்
முழவங்கிளை துர்துபி கண்டையுடன்
நிரைசங்கொலி யெங்கு முழங்குதலா
னீடுங்கட லென்ன நிறைந்துளதே. "

(திருநா—புராணம்.) என்ற செய்யுளால் விளங்கும். மேற் கண்டவற்றை யெல்லாம் பரியாலோசித்துப் பார்த்தால் அப்பர் ஜைன மதத்தில் இந்நிலைமையை அடைய 15 ஆண்டுகளாவது சென்றிருத்தல் வேண்டும். இவர் சைவத்தை மீட்டும் தழுவியகாலத்து இவருக்கு வயது நாற்பதை ஒட்டி இருந்ததென்று கொள்ளலாம்.

அப்பர் சுவாமிகள் திருவதிகையி லிருந்து தலயாத்திரை செய்யப் புறப்பட்டுத் திருவெண்ணெய் நல்லூர், திருக்கோவலூர், பெண்ணாடகம் முதலிய தலங்களில் சிவபிரானை வணங்கிச் சிதம்பரம் வந்தனர். அங்குச் சில நாள் தங்கியிருக்கும் காலத்து ஞான சம்பந்த மூர்த்திகளுக்குத் திருமுலைப்பால் ஊட்டிய விருத்தாந்தத்தை அடியார்கள் சொல்லக்கேட்டு அவரை வணங்குதற்குச் சீகாழி வந்தனர். அடிகள் காழிக்கு வந்தகாலத்துத் திருஞான சம்பந்தமூர்த்திகள் திருமுலைப் பாலூட்டப்பெற்று நான்கு ஆண்டுகள் ஆயின. அக்காலத்து அப்பர் சுவாமிகள் தேகத்தில் வயது முதிர்ச்சியால் நடுக்கமிருந்த தென்று சொன்னேன். சிலர் " திருமேனி தனிலசைவும் " என்றது 'ஆனந்தப் பரவசத்தாலாய தளர் நடையை யுணர்த்தும்' என்பர்; அவர் கூற்றுப் பொருத்த முடையதென்று தோன்றவில்லை. அப்பர் சுவாமிகளுக்கு எழுபது ஆண்டுகளுக்குமேல் இருக்கவேண்டும். இதனுல் சுவாமிகள் திருவதிகையில் சற்றேறக்குறைய முப்பதாண்டுகள் வதிந்தனரென்று கொள்ளலாம். சீகாழியில் திருஞானசம்பந்த அடிகளோடு சில நாள் உடனுறைந்து பின்னர்த் தலயாத்திரை செய்யப் புறப்பட்டனர். மறுபடியும் திருப்புகலூரில் ஞானசம்பந்த மூர்த்திகளைச் சந்தித்தனர். சந்தித்தது, சம்பந்தமூர்த்தி அடிகள் திருச்சங்காட்டங்குடியில் சிறுத்தொண்ட அடிகளைச் சந்தித்ததற்குப் பின்னர். சீகாழியில் உடனுறைந்ததற்கும் திருப்புகலூரில் சந்தித்ததற்கும் இடையில் நான் காண்டுகள் சென்றிருக்கலாம். திருப்புகலூரில் சிறுத்தொண்டர், நீலநக்கர் முதலிய அடிகளும்வர, யாவரும் முருகனர் மடத்தில், அவர் குறைவறுக்க உடனுறைந்தனர்.

(சுதந்திரன்.)

காந்தியடிகள் திருத்தசாங்கம்.

1. பேர்

ஏரா ரிளங்கிளியே எத்தேச பத்தர்கோன்
சீரார் திருநாமஞ் செப்பாயால்—ஊரார்
அருமையாய்க் கொண்டாடு மன்பர்மோ கன்தாஸ்
கரிம்சந்தாங் காந்தியென்பேன் காண்.

2. நாடு

பூக்கள் நிறைந்தபொழில் புக்குறையும் பொற்கிள்ளாய்
மாக்கே முடையான் வளநாடென்—ஆக்கமுளான்
அந்தமிலா வானந்தன் அன்பினு லாள்வதுவும்
இந்தியநன் னாடே யினி.

3. ஊர்

தாதாடு பூஞ்சோலைத் தத்தாய் நமக்காக
வாதாடும் வாயுடையான் வாழ்பதியென்—மாதார்

சகத்திலம ராபுரிக்குச் சாலநிக ராகும்
அகமதா பாத்தென் றறி.

4. ஆறு

செந்துவர்வாய்ப் பைஞ்சிறகிற் செந்தேன் மொழிக்கிள்ளாய்
அந்தமிலா அன்புடையான் ஆறுரையாய்—பைந்தொடீ
ஆன்முதுகி லேறும் அரன்சடையி னின்றிழிந்த
வான்வந்த கங்கையென வாழ்த்து.

5. மலை

அறமுரைக்கும் வாயென் னருமைமொழிக் கிள்ளாய்
துறவோன் திருமலைநீ சொல்லாய்—மறந்தீரும்
ஆண்டகையான் காந்தி யலர்மதிபோ லோங்கியே
சேண்டீண் டிமயமெனத் தேர்.

6. ஊர்தி

மதுர மொழிக்கிள்ளாய் மாற்றாரும் போற்றுஞ்
சதுரனவ னூர்புரவி சாற்றுங்—கதிரவனே
தானூர் புரவிகளும் தாமொவ்வாச் சீருடைத்தாங்
கோனூ ரறப்புரவி கூறு.

7. படை

கோற்றேன் மொழிக்கிள்ளாய் கோறிலாத் தேசபக்தன்
போற்றாரை வெல்லும் படைபுகலாய்—எற்றார்கள்
எங்குற்றார் எத்தனைபேர் எத்தகைய ராயினும்
அங்கவரை வெல்லுவதாம் அன்பு.

8. முரசு

இன்ப மொழிக்கிளியே எம்பெருமான் எந்தந்தை
தன்பெருமை சாற்றுந் தனிமுரசே—தன்புடையாய்
திண்டோள் மறமன்னர் சீற்றங் கடந்தொலிசெய்
உண்மைப் பறையென் றுரை.

9. தார்

பழந்தேர் பசுங்கிளியே பாஞ்சாலர் மானம்
இழந்தாற் பரிந்திடுவான் இன்றார்—உழவார்க்கும்
மாநிலத்தா ரியாரு மனமகிழ்ந்து சூட்டுகின்ற
வான்கிரா மன்னுபுகழ்த் தார்.

10. கொடி

நல்ல பசுங்கிளியே நந்தவத்தால் வந்தோன்நம்
அல்ல லகற்றும் அருங்கொடிசொல்—இல்லாமை
இன்னே யகற்றி இகல்கடியு நூற்சக்ர
மன்னுங் கொடியா மதி.

ச. கந்தசாமிமுதலியார்,
திருவள்ளூர்.

இல்லறம்—கன்மம்.

(99-ம் பக்கத்தொடர்ச்சி)

ஆயினும் இடத்தால் கன்மம் வேறுபடும். தேசங்டோறும் சீதோஷ்ண நிலைமை வேறுபடுதலாலென்க. ஆதலால் அவ்வத் தேச சீதோஷ்ண நிலைமையின் வேறுபாட்டை யுணர்ந்தே அவ்வவ் விடங்கட்குரிய கர்மங்களையும் வேறுபடுத்தி அவர்களே யெழுதிவைத்தனர். காலத்தாலுந் தேசத்தாலும் சாதிக்கக்கூடிய அளவுக்கேற்ற வேறுபாடுகளே யிவற்றில் காணப்படும். இதனாலேயே யாக்ஞவல்கிய முனிவர் தேசத்தாலும், காலத்தாலும், உபாயத்தாலும் என்று கர்மங்களை வேறுபடுத்தி யுரைத்தனர். ஆயினும் தேசமும் காலமும் ஒன்றை யொன்றுபற்றியே நிற்கும். இவ்வாறு கால தேசங்களால் வேறுபடினும் கன்மம் அநித்திய மென்பதில்லை. அது நித்தியமான பலனை யளிக்கும்.

இனி இக்கர்மங்களை யிந்தப் பாதகண்டத்திலுள் செய்யவேண்டுமென்பது யாதுபற்றி? என்பதோர் கேள்வி. இதன் கருத்து யாதெனில், கர்மம் கடவுளால் விதிக்கப்பட்டதானால் அவர் அந்தக் கன்மத்தை ஒரே தேசத்துக்காகவா விதிப்பார். ஏனென்றால் இக்கன்மம் இத்தேசத்திலேயே யனுஷ்டிக்கப் படுகின்றது. இப்பாத கண்டத்தில் உத்தேசம் முப்பது கோடி ஜனங்களிருக்கிறார்கள். அவர்களுள் இக்கன்மத்தை யனுஷ்டிப்பவர் 17 கோடிபே ரிருக்கலாம். இந்தச் சனங்களுக்கே கடவுள் இக்கன்மத்தை விதித்தாரெனில் இவர்களை மட்டுந்தானா கடவுள் படைத்தார்? அது பொருந்தாமையால் இக்கன்மம் நித்தியமெனல் கூடாது. ஆகையால் வடதிசையிலிருந்து இங்கேவந்து குடிபுகுந்த ஆரியர் என்னும் ஒரு வகுப்பினர் தம்மினத்தவர்க் கென்று ஏற்பாடு செய்துகொண்ட ஒரு கட்டுப்பாடென்பதே யுசிதம். அநாதி கன்மபந்தத்தினால் மறுபிறப் புண்டென்றும், அக்கன்மம் பாதகண்டத்தவர்க்கே யுரியதென்றும் நீ கூறுதலால் ஏனையோர் கன்மபந்த மில்லாதவர்க ளென்றே கருதவேண்டும். அவர்கள் மரித்தால் மோட்சத்தை யடைவார்கள். பாதகண்டத்தவர்கள் பந்தமுடையவர்களாதலால் அவர்கள் பிறந்து பிறந்து மரிப்பார்கள். ஆதலால் ஆரியரைவிட மிலேச்சர் என்று நீங்கள் இகழ்ந்து கூறும் அந்நிய தேசத்தார் பாசமற்ற புண்ணியாத்மாக்களாவா ரென்பதாம்.

இவ்வாறு கேட்பது தகாது. ஆதியில் இமாசல பர்வதத்திலேயே சிருஷ்டிதொடங்கியது. அப்பொழுது சொற்பஜனங்களே யிருந்தார்கள். அவர்கள் மோட்சத்தையடைய விரும்பியே கடவுள் அவர்களுக்கு மனு முதலியோர் மூலமாக சன்மார்க்க நெறிகளை அருளினார். ஜனத்தொகை பெருகினபோது சிஷ்டாசார சிலர்கள் தென்திசை நோக்கிவந்து பிரம வர்த்தம், ஆரியவர்த்தம் என்ற இடங்களிற் குடியேறினார்கள். இவ்விடங்களிற்

கர்மானுஷ்டானத்துக் குரிய சௌகரியங்க ளெல்லாம் நிறைந்திருந் தமையால் இங்கே குடியேறினவர்கள் கர்மங்களை விடாமலும் தவறாமலும் முறைப்படி யனுஷ்டித்து வந்தார்கள். அவர்களுடைய சந்ததியாரே யிப்பொழுது கர்மானுஷ்டானத்தை விரும்பிச் செய்துகொண்டு இப்பரதகண்டத்தில் வசிக்கிறார்கள். வேறு சிலர் கூட்டங் கூட்டமாகப் பிரிந்து வெவ்வேறிடங்களிற் சென்று குடியேறினார்கள். அவர்கள் தாங்கள் குடியேறிய இடங்களுக்குத் தக்கபடி நடையுடை பாவனைகளை யுடையவர்களாய் இப்பரதகண்ட வாசிகளோடு வேறு பட்டனர். அதனால் தாங்கள் ஆரியர்களோடு கலந்து வாழ்ந்த காலத்தில் அனுஷ்டித்த கன்மங்களில் தவறி, அக்கன்மச் சாயலான வேறுகன்மங்களை யனுஷ்டிக்கலானார்கள், ஆரியரோ தம் முன்னோர் நடந்தவழியைப் பின்பற்றித் தவறாமல் நடந்து வருகிறார்கள். வேறிடங்களிற் குடியேறினவர்களுக்குப் பாஷையும் வேறுபடவே யாரிய பாஷையின் பயிற்சி யில்லாமற் போயிற்று. ஆதலால் ஆரியபாஷையி லெழுதப்பட் டிருக்கிற ஸ்மிருதியாதி நூல்களைப் படித்து அவ்வழிபற்றி நடக்க அவகாசமில்லாமற் போயிற்று. ஆயினும் அவர்களுக்குக் கர்மானுஷ்டான புத்தி ஒழியாமையால் தங்கள் புத்திக்குத் தோன்றியவாறு சில கர்மாசாரங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதனால் ஆதியில் கர்மானுஷ்டானம் எல்லாருக்குமே கடவுளால் ஏற்படுத்தப்பட்டது என்பது புலப்படுதலால் இப்பரத கண்டத்தவர்க்கு மாத்திரமே கடவுளால் விதிக்கப்பட்டதல்ல வென்று கொள்க. எல்லாருமே கன்மபந்த முடையவர்க ளாவார்களே யன்றிப் பரதகண்டத்தவர் மாத்திரமல்ல. பரதகண்டத்தார்க்கு ஆரிய பாஷை சிதையாமல் நடைபெற்று வருதலால் ஆதியிற் கூறிய கர்மங்களை யனுஷ்டிக் கின்றார்கள் என்றும், மற்றவர்களுக்குப் பாஷை வேறுபாட்டினால் கர்மசொரூபம் சிதைந்து போயிற்றென்றும், அவர்கள் தமது புத்திக்குத் தோன்றியவாறு சில கன்மங்களை யேற்படுத்திக் கொண்டு அனுஷ்டிக்கிறார்களென்றும் கூறுவதே யுசிதமாவ தன்றிக் கடவுள் பட்சபாதக முடையவராவா ரென்பது நியாயமாகாது.

ஆயின் ஆதியில் மனிதர்கள் இவ்விடத்திலேயே வசித்தா ரென்பது எவ்வாறெனில், இக்காலத்தில் வழங்கும் பூமி சாஸ்திரங்களா லுணரலாம். எவ்வாறெனில் உலகத்திலுள்ள ஜனங்களின் பற்பல ஆசாரங்களும் அநேக சொற்களும் ஒத்திருத்தலால் இவர்கள் எல்லாரும் ஒரு காலத்தில் ஒரே கூட்டத்தாரா யிருந்திருக்க வேண்டு மென்று தோன்றும். அவ்வாறாயினும் அவர்கள் எல்லாரும் ஆதியில் இந்தப் பரதகண்டத்திலேயே ஒருங்கு கூடி வசித்தார்கள் என்பது எவ்வாறெனில், அது சோதனையால் விளங்குகின்றது. பூமியைச் சோதித்துப் பார்த்தால் நெடுங்காலத்துக்கு முன்னமே ஜனங்கள் இவ்விடத்தில் குடியிருந்த அடையாளங்கள் காணப்படுகின்றன. ஆரியர் பிரமாண நூல்களும் அவ்வாறே கூறுகின்றன. மகமதியர் கிறிஸ்து

வர்களும் ஆதியில் ஆசியா கண்டத்திலேயே மனித சிருஷ்டியுண்டாயிற்று என்று நிச்சயமாய்க் கூறுகிறார்கள். ஆரியர்கள் ஆசியா கண்டத்திலுள்ள இமாலய பர்வதத்தையே யாதி சிருஷ்டி ஸ்தானமாய்க் கூறுகின்றார்கள். எல்லாரும் சிறிது வேறுபட்டாலும் இவ்வாசிய கண்டமே மனித சிருஷ்டி யுண்டான விடமென்று கூறுகின்றார்கள். எல்லாத் தேசங்களுக்கும் முன்னாலேயே பரதகண்டம் நாகரீகத்திலும் கல்வி கேள்விகளிலும் சிறந்திருந்ததென்று தேசசரித்திரங்களும் கூறுகின்றன. ஆங்கிலேய பண்டிதர்களால் எழுதப்பட்ட இந்துதேச சரித்திரங்களும் இதனை ஒப்புக்கொண்டே பேசுகின்றன. அந்த நாகரீகம் தோன்றிய விடம் பரதகண்டமே யென்பது சரித்திரங்களால் தெற்றெனப் புலப்படுதலால் ஆதியில் ஜனங்கள் இவ்வாரிய தேசத்திலிருந்தே வெளியேறினார்கள் என்பதும் பொருந்தும். வைத்தியம், ஜோதிடம், சிற்பம் முதலிய எல்லாச் சாஸ்திரங்களும் இந்தியாவிலேயே சீர்பெற்றிருந்தன வென்று அந்நிய தேசஸ்தர்களாலும் ஆங்கிலேய சோதகர்களாலும் விளக்கப்பட் டிருக்கின்றது. இதனால் வெகுகாலத்துக்கு முன்னால் இப்பரதகண்டத்திலேயே எல்லாரும் ஒருங்கேகூடி வசித்தார்களென்று தடையின்றி ஒப்புக்கொள்ளலாம். இங்கிலாந்து தேசசரித்திரத்திலும் ஜாதிவேறுபாடு கூறுமிடத்து ஆசியாவினின்றே ஜனங்கள் அந்நிய தேசங்களிற் சென்று குடியேறினார்கள் என்று கூறப்பட் டிருக்கின்றது. இதனால் ஆதியில் மனிதர்கள் பரதகண்டத்தில் ஒருங்குகூடி வசித்தார்கள் என்றும், அவர்களுக்கு அப்போது பாஷையும் ஒன்றாகவே யிருந்ததென்றும், அந்தப்பாஷையில் எழுதப்பட்ட கன்மநூல் எல்லாருக்கும் பொதுவானதேயன்றி ஆரியர்களுக்குமாத்திரம் கூறப்பட்டதல்லவென்றும் புலப்படும். காலதேச பாஷை வேறுபாட்டால் அக்கன்மங்கள் அந்நிய தேசங்களில் சிதைந்தன வென்றும் உணரலாம். ஆரியர்களுக்கு அந்த வேறுபாடு உண்டாகாமையால் ஆதியில் விதிக்கப்பட்ட கன்மநூல் விதிவழுவாமல் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதென்று காணலாம். இதனால் உலகத்தில் எல்லா ஜனங்களும் கன்மபந்த முடையவர்களே யென்றும், அது காரணமாக அவர்களும் பிறந்திறக்க வேண்டியவர்களேயா மென்பதும் புலப்படும். இவ்வாறு ஊகித்துணராமல் ஆரியர்கள் மாத்திரமே கன்மபந்தப்பட்டவர்களென்றும் அவர்களே பிறந்து பிறந்து இறப்பார்களாதலால் அவர்களுக்கே கர்மானுஷ்டானம் வேண்டப்படும், மற்றவர்கள் கர்மபந்த மில்லாதவர்களாதலால் அவர்கள் மோட்சமடைவார்க ளென்றுங் கூறியது சீர்பெறாதென்க.

(இன்னும்வரும்)

சிவானந்தசாகர யோகீஸ்வரர்.

ஒழுங்கான கல்வி.

(திருவல்லிக்கேணி அரசினர் பெண்பாடசாலையில்
நாகை நீலாம்பிகை அம்மை செய்த விரிவுரை.)

கல்வி என்னும் சொல்லுக்குப் பொருள் நம் மனத்தின் கண்ணிருக்கின்ற அறியாமையிருளைக் கல்வி நீக்கி விளக்குவது என்பதாம். கல்வியானது நூற்கல்வி தொழிற்கல்வி யென இருவகைப்படும். மேன்மேலும் தம் அறிவை விளங்கச் செய்யவேண்டுமென்னும் எண்ண முடையார்க்கும், உலகறி இயற்கைப் பொருள்களைப்பற்றி ஆராய்வோர்க்கும் நூற்கல்வி இன்றியமையாத தொன்றாம். நூற் கல்வியால் நாமெய்தும் பயன்கள் அறம், பொருள், இன்பம், வீடு என நான்கு. அவைகளைக் குமரகுருபர அடிகள்,

" அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை " என்று

நீதிநெறி விளக்கத்திற் கூறியுள்ளார்.

இவற்றுள், அறத்தைப்பற்றிச் சிறிதாராய்வாம். அறத்தைக் கல்லாதாரும் செய்யக் காண்கின்றோமே யெனின், அவர்கள் நூல்களிற் கூறிய அறப்பயன்களை உணராராகலின், அவர் செய்யும் அறம் பிழைபாடுடைத்தென்று பிறர் கூறின் அதைச் செய்தலை விடினும் விடுவர். ஆனால், கற்றவரோ நூல்களிற் கூறிய அறப்பயன்களை நன்கு உணர்ந்திருப்பாராகலின், தாம் செய்யும் அறம் முறையன்றென்று பிறர் கூறினும் அதனைச் செய்தலினின்றுந் தவறார். கல்லாதார் பெரும் பொருளைக்கொண்டு அறஞ் செய்யப் புகினும், நூல்களிற் கூறிய முறைப்படி தக்க வழியில் அதனைச் சிறக்கச் செய்ய ஆற்றலற்றவர்களா யிருக்கின்றனர். கற்றோர் சிறு பொருளைக் கொண்டும் அறத்தைப் பெரிதாகத் தக்க வழியில் சிறக்கச் செய்வார்களாகலின், இதனைக் குறித்தே

" உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்—கறப்பயனும்
தான்சிறிதே யாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும் " என்று

நாலடியாரில் கூறப்பட்டுளது.

பொருளைப்பற்றிச் சிறிதாராய்வாம். கல்லாதார் எக்காலத்தும் செல்வமுடையரா யிருத்த லரிது. ஏனெனின், கல்லாதார் பொருள் பிறரால் கவரப்படினும் வேறு வழிகளிற் கேடுறினும் அவர் அப்பொருளை மீண்டும் பெறலரிது. கற்றோர் செல்வத்தை யிழப்பின் மீண்டும் கல்வியினுதவியால் அச் செல்வத்தை எளிதாகப் பெறுவர்,

இன்பத்தைப் பற்றிச் சிறிதாராய்வாம். கல்லாதாரிடத்துப் பெரும் பொருளிருப்பினும் அதனைத் தக்க நாகரிக வழியிற் செலவழித்து இன்பநுகர அறியாதவர்களா யிருக்கின்றனர். இதனைச் சில நாட்டுப்புறங்களிலுள்ள பெரும் பணக்காரர்களிடத்து இன்றுங் கண்கூடாகக் காணலாம். அவர்கள் கற்றல், உண்ணல், உடுத்தல், கொடுத்தல் முதலியவைகளால் உண்டாகின்ற இன்பங்களை முறையாக அடையக் கல்வியறிவின் விளக்கமின்றித் தம் பொருள்களைப் பொய்யான இன்பங்களிற் செலவு செய்து தம் வாழ்நாளைக் கொன்னே கழிக்கின்றனர். இதனைக் குறித்தே

" உண்ணா னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்" என்று

நாலடியார் கூறா நிற்கின்றது.

வீட்டைப்பற்றிச் சிறிதாராய்வோம்.

" ஈதற்குச் செய்க பொருளை யறநெறி
சேர்தற்குச் செய்க பெருநூலை — யாது
மருள்புரிந்து சொல்லுக சொல்லை யிம்மூன்று
மருளுலகஞ் சேராத வாறு " என்னும்

திரிகடுகச் செய்யுட் கிசைய வீடடைதற்கேதுவாகிய அறம், பொருள் இன்பம் என்னுமிவற்றை இம்மையில் முறையாகச் செய்தால் அதுவே மறுமையில் வீடுபேற்றைத் தருவதாம். மேற்கூறிய இருவகைக் கல்வியுள், நூற்கல்வியானது தன் மொழிக் கல்வி யெனவும் பிறமொழிக் கல்வியெனவும் இருவகைப்படும். தன்மொழிக் கல்வியென்பது தான் கட்டாயமாகக் கற்கவேண்டிய தாய்மொழிக் கல்வியாம். பிறமொழிக் கல்வி யென்பது அயல் நாட்டுக் கல்வி யென்பதாம். நாம் நம் தாய்மொழியை இயன்றவாறு கற்றுத் தேர்ச்சி யடைந்த பின்புதான் பிறமொழிகளைக் கற்கவேண்டும். இன்றேல், நம்மறிவு இரண்டிலும் நிரம்பப் பெறாமல் குறைபாடுடையதா யிருக்கும். தாய்மொழி கல்லா அறிவு வலிவற்றதாகவே யிருக்கும். எங்ஙனமெனின், ஒரு வலுவற்ற தூணின்மேல் வலிய சுமைகளை யேற்றினால் அத்தூண் தாங்காது முறியும்; அதுபோல, நாம் நம் தாய்மொழியில் நம்மறிவை வலுப்படுத்துதற்கு முன்னரே அயல் நாட்டுக் கல்வியைக் கற்போமாயின், அதன்கண்ணும் உயர்ந்த அறிவை யடையப் பெறாது நம் தாய்மொழியிலும் அறிவுவிளங்கப் பெறாது அறியாமையிற் கிடந்து உழல்வோம். நம் தாய்மொழியுள்ளும் பிறமொழியுள்ளும் சொற்களையும் சொற்றொடர்களையும் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்றாலன்றி அவற்றின்கண்ணுள்ள மெய்ப்பொருள் விளங்காது. பிழையின்றி எழுதுதற்கும் படித்தற்கும் கருவியாயிருப்பது இலக்கணக் கல்வியேயாகும். இலக்கணம் என்னும்

சொற்குப் பொருளென்னையெனின், இலக்கியத்திலுள்ள அமைப்புகளைச் செவ்விதின் விளக்கிக் காட்டுவது என்பதாம். ஒரு தச்சன் ஓரழகிய பாவையைச் செய்யவேண்டின் அதனை யமைத்தற்குரிய கருவிகளை முதலிற் செம்மையாகத் தெரிந்து வைத்துக்கொள்ளல்போல, நாமும் இலக்கிய நூல்களைப் பிழையறப் படித்தற்கு இலக்கணம் கட்டாயம் வேண்டும். இலக்கணத்தின் முதன்மையைக் குறித்தே,

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு" என்று

திருவள்ளுவ நாயனார் கூறியிருக்கின்றார்.

இத்திருப்பாட்டிலுள்ள எண் என்னுஞ் சொல்லுக்குச் சிலர் கணக்கு என்று பொருள் கூறுகின்றார்கள். ஆனால், "எண்ணல் எடுத்தல் முகத்தல் நீட்டல் என நான்களவையும் உம்மிலதத் தொகை" என்னும் நன்னூற்சூத்திரப்படி எண் என்பது எண்ணலளவை, எடுத்தலளவை, முகத்தலளவை, நீட்டலளவை என நால்வகைப்படும். ஈண்டு எண்ணலளவையென்பது கருத்தாலளக்கப்படும் அளவை நூலாகும். வடமொழியில் இதனைத் தருக்க நூலென்பர். மற்ற எடுத்தல் முகத்தல் நீட்டல் என்பனவோ புறப்பொருளாராய்ச்சியாகும். மெய், வாய், கண், மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளாலும் உணரப்படும் பொருள்களையும் அப்பொருள்களின் தன்மைகளையும் அறிவதே புறப்பொருளாராய்ச்சி. அவ்வைம்புலன்களாலும் ஆராய்தவற்றையும் புறப்பொருளுக்கு மேம்பட்ட கடவுள் நிலையையும், துறக்க நிலையையும், மெய்யறிவையும், உயிரின் நிலையையும் ஆராய்வது அகப்பொருளாராய்ச்சி. ஒன்று இரண்டு மூன்றென எண்ணியறிதலே எண்ணலளவை. பலம், வீசை, மணங்கு என நிறுத்தறிதலே எடுத்தலளவை. விரல், அடி, முழம் என நீட்டியறிதலே நீட்டலளவை. ஆழாக்கு, உழக்கு, படி என முகந்தறிதலே முகத்தலளவை. இந்நான்களவைகளும் நாம் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் புறக்கருவிகளைக் கொண்டு வெளியேயுள்ள பொருள்களை ஆராய்தலால் கணக்கு நூலாராய்ச்சியைப் புறப் பொருளாராய்ச்சி யென்று வழங்குவர். இப்புறப் பொருளாராய்ச்சியாலளக்க முடியாத கடவுள் நிலை துறக்கநிலை முதலியவற்றை நுட்பமாக ஆராயும் ஆராய்ச்சியே அகப்பொருளாராய்ச்சி யென்று வழங்கப்படும். கண்டதைக்கொண்டு காணாததை யறிவதே தர்க்கமாகும். எதுபோலெனின், நாம் அடுக்களையில் தீயையும் புகையையும் பலகாலுங் கண்டு அப்புகை தீயினின்றும் வருகின்றதென்பதை உணர்ந்தபின் நாம் ஒரு மலைப் பக்கத்தே செல்லும்போது அம்மலைமேலிருந்து புகையெழ, முன் தீயினின்றும் புகைவருதலைக் கண்டிருக்கின்றோமாகலின், அப்புகை வருதற்கு அவ்விடத்துத் தீயிருக்கின்றதென்று உணர்கின்றோம்.

(தொடரும்)

து. தீனதயாளு. B. A.

பகவத்கீதை வசனம்.

(107-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏ! அர்ச்சுனா! எவனொருவன் நான் என்ற அகங்காரமற்றவனாய், தேகம் முதலாக உலகிலுள்ள எல்லாப் பொருள்களிடத்தும் எனது என்ற அபிமானமற்றவனாய், யாவற்றையும் பரித்தியாகம் செய்து, சச்சிதானந்த சொரூபமாகிய நாமே இரண்டற்று விளங்குகின்றோம் என்ற திடப்பிரக்ஞையாகிய உண்முக நாட்டமுடையவனாய், எஞ்சிய பிராரப்தபோகத்தைக் கனவுபோல் புசித்துக்கொண்டு, காலதேசவஸ்து பரிச்சேத மற்றவனாய்ச் சஞ்சரிக்கின்றானோ, அவனையே சர்வதுக்க நிவர்த்திரூபமான மோக்ஷமாகிய சாந்தி யடையா நிற்கும். இந்த நிலைமையை யடைந்தோர் சம்சார மோகத்தோடு கூடிய இழிவான நிலையையடையார். இறக்கும் தருவாயிலேனும் இத்தகைய நிலைமையை யடைவோர் என்னை யடைவார்கள். பிறவி யெய்தார்.

[தேகாதிப் பிரபஞ்சங்களில் நான் எனது என்கிற பற்றொழிந்து ஆன்ம சாக்ஷாத்காரமாகிய சமாதி நிலையடைந்த பிரம்மநிஷ்டன் பிராரப்த போகத்தை யனுபவிக்கும்போதும் அவற்றின் உயர்வு தாழ்வு சுகாசுகம் முதலிய வொன்றையும் கவனியாது, காட்டுத்தீ சந்தன விருக்ஷமென்றும் எட்டி விருக்ஷமென்றும் கவனியாது எட்டிய எவற்றையும் தகிப்பதுபோல், கிடைத்த போகத்தைப் புசித்துக் கவலையற்று, இரண்டற்ற அகண்டாகார நிலை பொருந்திய உண்முக நாட்டத்திலே சஞ்சரிப்பான். அத்தகைய நிலையிலிருப்பவன் தேகாந்தத்தில் பிறப்பிறப்பற்ற முத்தியடைவான்.

இந்த இரண்டாவது அத்தியாயத்தில் ஆன்ம ஞானமும் அதற்குச் சாதனமாகிய நிஷ்காமகர்மம், சித்த சுத்தி, ஞான நிஷ்டை முதலியவைகளும் கூறப்பட்டன.]

3-வது கர்மயோக அத்தியாயம்.

அலைகளையுடைய திருப்பாற்கடலின்கண் அரிதுயில் அமர்ந்தோனும், அரிய வேதங்களின் சிரோரத்தினமாய்ப் பிரகாசிப்பவனுமாகிய பகவான் குருக்ஷேத்திரத்தில் பார்த்தனுடைய இரதத்தில் எழுந்தருளியிருந்து வேதங்களிலுள்ள அரிய பொருள்களைத் திரட்டியறிவித்தும், காண்டீபனாகிய விஜயன் உண்மைப் பொருளை யுணராதவனாய்ப் பகவானை நோக்கிப் பின்வருமாறு கூறலுற்றான்.

"ஏ! ஜனார்த்தன! * முதலில் நிட்காமகருமத்தைக் காட்டிலும் ஞானமே சிரேஷ்டமானது என்று அருளிச்செய்தீர். பிறகு ஆன்மதத்துவ ஞானத்தினும் கர்மமே சிறந்தது என்று அருளினீர். இந்த இரண்டில் எது மேலானது என வெண்ணி நான் கைக்கொள்வேன்? தங்களையே சரணடைந்துள்ள அடியேன் சோகத்தை யொழிக்க ஒரே மார்க்கத்தை நிச்சயித்தருளல்வேண்டும்."

* தாந்தாம் இச்சித்த பொருள்களை யடையும்பொருட்டு எல்லா ஜனங்களும் யாரைப் பிரார்த்திக்கிறார்களோ அவரே ஜனார்த்தனர். அல்லது ஜன்மத்தையும் அதன் காரணமாகிய அஞ்ஞானத்தையும் ஒழிப்பவர் ஜனார்த்தனர்.

[ஞானநிஷ்டை, கருமநிஷ்டை என்ற இரண்டில் ஞான நிஷ்டையே சிறந்ததெனக்கூறினீர். அதுவே வேதங்களின் கருத்தாயின், அடியேனை இக்கோர கருமமாகிய யுத்தத்தைச் செய்யும்படி ஏன் ஏவுகிறீர்? மறுபடி நிஷ்காமகருமமே சிறந்தது என்று அருளினீர். இவ்வாறு இரண்டையும் கலந்து கூறினால் அடியேன் மயக்கமடைகின்றேன். ஆகையால் என் சோகம் நீங்கி நான் முத்தியைப் பெறுதற்குரிய நிச்சயமான ஒரே மார்க்கத்தைக் கூறும் என்ற கருத்தால் அர்ச்சுனன் அவ்வாறு வினவினான்.

இருளை நீக்குதற்கு ஒளிமாத்திரமே காரணமாக இருத்தல்போல் மோக்ஷத்திற்குக் கேவலம் ஆன்ம சாக்ஷாத்கார ஞானமே காரணம் என்றும் அதின்றி மோக்ஷம் கிட்டாதென்றும் முன்னே கூறினார். பிறகு கரும நிஷ்டையே சிறந்தது என்றார். இரண்டும் ஒரே அதிகாரிக்கு எவ்வாறு பொருந்தும்? ஆகையால் அர்ச்சுனன் கலக்கமடைந்து மேலே கண்டவாறு வினவினன்.]

பகவான்:— ஏ பார்த்த! நாம் உபதேசித்த ஞான நிஷ்டை கர்ம நிஷ்டை என்ற இரண்டும் உண்மைதான். கருமங்களை நிஷ்காம சித்தத்துடன் செய்யாதவனுக்கு ஆசை யொழியாது. கருமங்களை யடியோடு விட்டுவிட்டதால் மட்டும் ஒருவன் மோக்ஷத்தை யடையமாட்டான். பாபம் புண்ணியம் என்கிற இருவினைகளைச் செய்யாதவர்கள் ஒருவருமே யில்லை. ஆசையை யொழிக்காமல் கருமத்தைச் செய்யாதொழித்தவன் பொய்ப் பாவனை செய்பவனாவான்.

[உலகில் சித்த சுத்தியுடையவர்கள், அதாவது ஆசை யொழிந்தவர்கள் என்றும் சித்தசுத்தி யில்லாதவர்கள், அதாவது ஆசை யொழியாதார் என்றும் இருவகை யதிகாரிகளுளர் — இவர்களில் சித்தசுத்தி யுடையவர்களுக்கு ஞானயோகம் கூறப்பட்டது. சித்த சுத்தியில்லாது கர்மங்களில் உழன்றுகொண் டிருப்பவர்களுக்கு நிஷ்காம கருமத்தைச் செய்வதாகிய கர்மயோகம் கூறப்பட்டது.

நிஷ்காம கர்மத்தால் சித்த சுத்தியும், அதனால் ஞானமு முண்டாகும். ஆசையை யொழிக்காமல் புறக்காரணங்களை மட்டும் அடக்குவதால் ஞான முண்டாகாது. இதனால் ஆசையை யொழிக்காமல் கர்மங்களைச் செய்யாது விடும் சந்நியாசத்தால் ஒருபயனுமில்லை யென்பதும், அது பொய்ப்பாவனை யாகிய வெளிவேடமே யென்றும் கூறப்பட்டது. ஏனெனில் ஆசை யொழியாது இச்சாசொரூபமான மனமடங்காது. அதனால் அவன் வெளி யிந்திரியங்களைமட்டும் அடக்கிக்கொண் டிருந்தாலும், உண் முகத்தில் இராகத் துவேஷாதிகள் பொருந்திய மனத்தால் சத்தாதி விஷயங்களைச் சிந்தித்துக்கொண்டிருப்பானே யன்றி ஆன்ம தத்துவத்தைச் சிந்திக்கமாட்டான். நிஷ்காம கருமத்தால் (மேல் கூறப்பட்ட வழியாக) ஞானமுண்டாகும்— ஆனால் சாதாரணமான தான யாக யெக்யாதி கர்மங்களால் மோக்ஷ முண்டாகாது.]

"அதிகாரி பேதத்தால் ஞானநிஷ்டை கர்ம நிஷ்டையென்று இரண்டு விதமாகக் கூறினதாகையால் அக்காரணமாக நீ மயக்கமடைய வேண்டாம். நீ நிஷ்காம சிந்தையோடு உனக்குரிய கர்மங்களைச்செய்" என்று பகவான் அருளிச்செய்கிறார்:—

"ஏ அர்ச்சுனா! எவன் சுரோத்திராதி ஞானேந்திரியங்களின் வழியாய் மனதை விஷயங்களில் செல்லவொட்டாது தடுத்து, இச்சையற்றவனாய்க் கருமேந்திரியங்களால் நிட்காம கருமத்தைச் செய்கிறானோ, அவன் ஆசையோடு பொருந்தியமனதை யுடைய சந்நியாசியினும் மிகச் சிறந்தவனாகும். ஆகையால் நீ யவ்வாறே கருமபலன்களில் சற்றும் ஆசையற்றவனாய்ச் சுருதியில் கூறப்பட்ட கருமங்களைச் செய்வாயாக. அக்கருமங்கள் காமியகர்மங்களைப்போல் அழியாமல், நிலைத்து நின்று ஞானத்தை யளித்துப் பிறவியை யொழிக்கும்.

(முமுக்ஷுக்கள் கர்மத்தைச் செய்வதால் பந்த மடைய மாட்டார்களோ என்று கிரீடி சங்கைசெய்ததற்கு, பகவான் காமிய கர்மமே பந்தத்தை யுண்டாக்கு மென்றும் ஈசுரார்ப்பணமாய்ச் செய்யப்பட்ட கர்மங்களால் பந்தம் உண்டாகா தென்றும் அருளிச் செய்கின்றார்)

"ஏ அர்ச்சுனா! இவ்வுலகோர் பலனை யிச்சித்தே கருமங்களைச் செய்வதால் பந்தத்திற் குள்ளாகிறார்கள். ஆதலின் நீ பல இச்சை யற்றவனாய் அப்பரமேஸ்வர ஆராதனையின் பொருட்டுக் கருமத்தைச் செய்வாயாக.

கர்ப்ப ஆதியின் கண்ணே பிரஜாபதி பிரஜைகளை நோக்கி "ஏ பிரஜைகளே! நீங்கள் எக்ஞத்தைச்செய்து விர்த்தி யடையுங்கள். தேவர்களைச் சந்தோஷிப்பிக்கும் தேவாராதனமாகிய இந்த எக்ஞங்கள் நீங்கள் விரும்பும் சகல பலன்களையும் அளிக்கும்" என்று அருளினார்.

அர்ச்சுனன்:— "பகவானே! தேவர்களை மகிழ்விக்கும் எக்ஞாதிகளால் மனத்தில் கோரிய பலன்கள் எவ்வாறு கிடைக்கும்?" எனச்சங்கிக்கப் பகவான் அருள்கிறார்:—

ஜனங்கள் எக்ஞாதிகளால் தேவர்களைத் திருப்தி செய்வித்தால் அவர்கள் மேகத்தின் வருஷஜல முதலியவற்றால் ஜனங்களைப் போஷிப்பார்கள்.

அவ்வாறு எக்ஞத்தால் அளிக்கப்பட்ட(ஆகாரம், பசு, பொன்முதலிய) நானா போகங்களைக்கொண்டு மீண்டும் அத்தேவர்களைப் பூசியாமல் தங்கள் சரீரேந்திரியங்களின் போஷணையை மட்டும் கருதிப் புசிப்பவர்கள் கள்வர்களும் செய்ந்நன்றி கொன்றவர்களு மாவார்கள். மேலும் தேவர்கள் அளித்த அன்னாதிகளைக்கொண்டு அவர்களைப் பூஜித்து அந்த அன்னசேஷத்தை யுண்ணாமல் தன் தேகம்பருக்கும் பொருட்டு உண்பவன் பாவங்களையே புசிக்கிறவனாவான். யாவன் தேவர்களுக்குப் படைத்து மிச்சமாகிய சேஷ அன்னத்தை யுண்பானோ அவன் பஞ்சசூனையாதிய சர்வபாவங்களையும் போக்கிக் கொள்வான்.

[யக்ஞம் ஐவகைப்படும். அவற்றிற்குப் பஞ்சயக்ஞங்கள் என்று பெயர். அவை (1) ரிஷியக்ஞம், (2) தேவயக்ஞம், (3) பூதயக்ஞம், (4) மனுஷிய யக்ஞம், (5) பிதுர் யக்ஞம்.

இவற்றில் வேதத்தைக் கற்றல் கற்பித்தல், சந்தியோபாசனம் இவை ரிஷியக்ஞம்-அக்னிஹோத்திரம் முதலியவை செய்தல் தேவயக்ஞம்-பலி வைசுவதேவங்களைச் செய்தல் பூதயக்ஞகம்-அதிதியை அந்நாதிகளால் உபசரித்தல் மநுஷியயக்ஞம் — சிரார்த்த தர்ப்பணாதிகளைச் செய்தல் பிதிர் யக்ஞம்.

யக்ஞங்களைச் செய்யாது தன் போஷணையை மட்டும் கருதிப் புசிப்பவன் பஞ்சசூனை முதலிய பாபங்களைப் புசிப்பவனாவான் என்று கூறப்பட்டது. பஞ்சசூனை பாபங்கள் என்பது, தேகபோஷணையி னிமித்தம் அந்நாதிகளை யாயத்தம் செய்யும்போது, நெற்குத்தல், எந்திரத்தில் அல்லது உரலில் மாமுதலிய அரைத்தல், அலகிடுதல், தீமூட்டுதல், ஜலம் காய்ச்சுதல் ஆகிய ஐந்து காரியங்களைச் செய்வதால் நேரிடும் ஜீவ இம்சையா லுண்டாகும் பாபம்.]

(எக்ஞ முதலிய கர்மங்கள் செய்வதன் விசேஷத்தை யின்னும் கூறுகிறார்)

ஏ அர்ச்சுனா! அந்நத்தால் சரீரங்கள் உண்டாகின்றன. அந்நம் மழை பெய்தலால் உண்டாகிறது. மழை தேவதைகளின் சந்தோஷத்தாலுளதாம். தேவதைகளின் சந்தோஷம் அக்கினிஹோத்திர முதலிய கர்மங்களினால் உண்டாவதாம்—இந்த அக்னிஹோத்திர முதலிய கர்மங்கள் வேதத்தினின்றும் உற்பன்னமாயின-ஆதலின் பரமான்மாவி னின்றுமுண்டான நாசமற்ற அவ்வேதமானது அத்தருமரூப எக்ஞத்தின் கண் உளதாமென்றறிதி.

மேலே கூறியபடி பரமேசுவரரிடத்தி லிருந்து வேதம் உண்டாயிற்று. வேதத்தில் அக்கினி ஹோத்திராதி கர்மங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அக்கர்மங்களைச் செய்வதால் தேவர்கள் சந்தோஷமடைந்து மாரியளிக்கிறார்கள். மழையால் (தானியங்கள் என்ற) அந்நம் உண்டாகின்றது. (உண்பொருளாய் புருடஸ்திரீகளின் தேகத்தில் நுழைந்து சுக்கில சுரோணிதமாகமாறும்) அந்நத்தால் மனுஷ்யாதி சரீரங்கள் உண்டாம். அம்மனுஷ்யர் மீண்டும் கருமங்களைச் செய்கின்றனர். ஜகம் நிலைபெற்றிருக்க ஈசுவரனால் நியமிக்கப்பட்ட நிலையான இச்சக்கரத்தின் வழி யொழுகாதவர்கள் வீணாக ஜீவிப்பவர்க ளாவார்கள். (அதாவது அத்தகையோர் உயிர்வாழ்க்கையால் ஒருபயனு மடையார்கள் என்பதாம்.)

(ஞானிக்கு எத்தகைய கருமானுஷ்டானமும் அவசியமின்று என்று பகவான் அருள்செய்கின்றார்.)

ஏ அர்ச்சுனா! எப்புருஷன் ஆன்மசாக்ஷாத்கார ஞானத்தை யடைந்து அந்த பிரம்மான்ம ஐக்கிய நிலையிலேயே நிலைத்து நின்று அந்த ஆன்மானந்தத்திலேயே திருப்தியடைந் துள்ளானோ அவனுக்கு எத்தகைய கருமமும் அவசியமின்றாம்—அவன் கருமத்தைச் செய்து அதனாலடையத்தக்க பயன் ஒன்றுமில்லை. அதைச் செய்யாததால் ஓர் பழியுமில்லை. ஒருவரும் அவன் கர்மங்களைச் செய்திலனே யென் றெண்ணவு மாட்டார்கள். அவனைச் செய்யும்படி கூறவு மாட்டார்கள். அவன் கிருதகிருத்தியனாவான். அவன் செய்யவேண்டுவன யாவும்செய்து முடித்தவன். இனிச் செய்யவேண்டுவ தொன்றுமே யில்லை.

(தொடரும்)

சீடன்.

(உறுதியான தேசபக்தியுள்ள ஓர் உத்தமி)

"சுதேசி உடையுடன் பார்க்கமாட்டேன்"

சென்னை சர்வகலாசாலையில் படித்து உயர்தரப் பட்டம்பெற்ற மிஸ் லாஸரஸ் என்ற ஒரு கிறிஸ்துவப் பெண்மணி மேனாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருந்த காலை உரோமாபுரிக்குச் சென்றான். சென்று போப் மதாசாரியாரைக் காண விரும்பினான். தன் விருப்பத்தை அப்பெரியாருக்குத் தெரிவித்தலும், அவர், சுதேச உடையுடன் இந்தமாது இருக்கின்றமையால் தரிசனம்தர முடியாதென்றும் ஐரோப்பிய உடையுடன் வந்தால் தரிசனம் தர முடியுமென்றும் பதில் கூறிவிட்டார். இந்த மாது தன் உடையை மாற்றிக்கொள்ள முடியாதென்றும் போப்பின் தரிசன பாக்கியத்தை இழந்துவிடச் சித்தமா யிருப்பதாகவும் தெரிவித்துவிட்டாள். கடைசியாகப் போப் மதாசாரியார், சுதேச உடையுடன் தம்மை வந்து காணலாமென்று தெரிவித்தார். இந்தச் செய்தி தமிழ்நாட்டிலுள்ள கிறிஸ்துவர்களுக்கு எவ்வித உணர்ச்சியைக் கொடுக்குமோ அறியோம். ஆனால் தன் உடையின் கௌரவத்தைக் காப்பாற்றிய ஸ்ரீமதி லாஸரஸைப் போற்றுகிறோம். நமது நாட்டிலேயே அந்நிய உடைகளுடன் உலாவும் பெரிய மனிதர்கள் இந்தச் செய்தியைக் கவனிப்பார்களா?

குறிப்பு:—சகோதர சகோதரிகளே! இப்போது மேற்கண்ட விஷயத்தில் கிருஸ்து சமயத்தவர்க்கு ஜகத்குருபோன்ற போப் அவர்கள் நமது இந்திய சகோதரிக்கு உடையின் காரணமாக தரிசனமளிக்க மறுத்ததிலும் அச்சகோதரியின் நடக்கையிலும் உள்ள விசேஷங்களைப்பற்றி நம்மவர் சிந்திக்கவேண்டுமென்பதுபற்றியே 23-9-22. வெளியான "நவசக்தி" பத்திரிகையில் இருந்த இவ்விஷயத்தை நமது சஞ்சிகையில் பிரசுரிக்க நேர்ந்தது.

போப் அவர்கள் அந்த அம்மையார் இந்திய உடை யணிந்திருந்ததால் அவருக்குத் தரிசனமளிக்க மறுத்தது தகுதியா அல்லாவா என்பதைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யவேண்டுவதில்லை. மற்றபடி நாம் அறியவேண்டுவது என்னை யெனின்; போப் அவர்கள் சந்நியாசி ஆசிரமத்தைச் சேர்ந்தவர். அவர் உலகப் பற்றற்றவராகவும் தம்மை யண்டிவந்தவர்களுடைய ஜாதி மதாசாரம் முதலியவற்றைக் கவனிக்காமல் தரிசனமளிப்பவராகவும் இருக்கவேண்டியவர் என்று யாவரும் எதிர்பார்ப்பார்கள். அத்தகையோர் தம் நாட்டிற்கு வந்தவர்கள் தமது நாட்டு ஆசாரப்படி உடை யணியவேண்டுமென்று விரும்புகிறார். அத்தகைய சந்நியாசிக்கே தம் தேசாசாரத்தில் எத்தனைய பற்றும் அபிமானமும் இருக்கிறதென்பது நன்கு விளங்குகிறதன்றோ.

அந்தோ மேல் நாட்டாரைப்போல் வேடமணிய விரும்பும் நம்மவர்களில் எத்தனைபேருக்கு அத்தகைய அபிமானமிருக்கும்? அது போகட்டும்.

தமது மதத்தைச் சேர்ந்த குருமார்கள் எல்லாரிலும் உயர்ந்த ஜகத்குருவாகிய போப் அவர்களின் தரிசனத்தை இழக்க நேர்வதாயினுங்கூட தமது தேசாசாரத்தைக் கைவிட்டு மேல் நாட்டாரைப்போல் உடையணியமறுத்துவிட்ட அவ்வுத்தமியின் தேசபக்தி எத்தகைய புகழ்ச்சிக் குரியது என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். இத்தகைய வீரமாதான்றோ தாய் நாட்டின் க்ஷேமத்தைக் கருதுவோர். அந்தோ நம் நாட்டு ஆடவரில் எத்தனை பேர் இம்மாது சிரோமணியின் உத்தம நடக்கையைக் கேட்டுத் தலைநாண வேண்டியவர்களாயிருக்கிறார்கள்! தம் பெண்மக்களுக்கு மேல்நாட்டாரைப்போல் உடையணிவித்து முகத்திற்கு வெள்ளைபூசிப் பாடசாலைக்கனுப்பும் நம் நாட்டுத்தாய்மார்கள் மேற்கண்ட தங்கள் சகோதரியின் வீரச்செயலை யறிந்த பிறகேனும் தங்கள் துர்ப்பழக்கத்தை யுடனே நிறுத்துவார்களென்று வேண்டிக்கொள்கிறோம்.

மேல் நாட்டாரை வெளிவேடமாகிய விஷயங்களில் மட்டும் பின்பற்ற ஆவல்கொள்ளும் நம்மவர், மேல்நாட்டாரிடமுள்ள இத்தகைய உத்தமகுணங்களைமட்டும் புறக்கணித்துவிடுதல் பன்னாடையின் செய்கையன்றோ. மேல்நாட்டார் எங்கு சென்றாலும் தங்கள் தேசாசாரத்தை விட்டு அன்னியரைப்போல் உடையணிகிறார்களா? தங்கள் தாய்நாட்டின் க்ஷேமத்திற்கு இடையூறான காரியங்களைச் செய்கிறார்களா? அந்தோ! நம்மவர் இவ்விஷயங்களில் ஏன் அவர்களைப் பின்பற்றலாகாது. இது நமக்கே மானக்கேடாய்த் தோன்றாதிருப்பது யார் செய்த தீவினையோ அறியோம். சகோதர சகோதரிகளே! நம்மை யன்னியர் மதிக்கவேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கிருக்குமாயின், நம் நாடு க்ஷேமமடையவேண்டுமாயின், பாரதமாதாவின் கோபத்திற்கு ஆளாகதிருக்கவேண்டுமாயின், நம்முன்னோர்களுடைய நல்லாசியை நீங்கள் பெற்று உங்கள் சந்ததியார் மேலோங்கி வரவேண்டுமாயின், இத்தீய செய்கைகளை யுடனே யொழித்து நமது ஸ்ரீமதி லாஸரஸ் சகோதரியின் மேற்கண்ட புகழ்ச்சிக்குரிய நடக்கையைப் பின்பற்றி யொழுகுங்கள். பரம்பொருள் நல்லருள் புரிவாராக.

பத்திரிகாசிரியர்

பெண்களும் மேல் நாட்டுக் கல்வியும்.

கழிந்த சில வருடங்களாக நமது இந்தியாவில் பெண்கல்வி அபிவிர்த்தியின் பொருட்டு ஆழ்ந்த பரிதாபத்துடனும், மிகுந்த ஊக்கத்துடனும், பெண் கல்வியைப் பற்றிக் கூறும், பல பத்திரிகைகளும், சில சிறு வியாசங்களும் ஆடவரும் மகளிரும் கண்ணுறாததும், அறியாததுமான ஓர் விஷயமன்று. இதைப் பரவச்செய்தற்கு முயற்சி செய்யும் பெரியோர்கள் பலருளர் என்பதும் ஒருவரும் அறியாததன்று. பெண்கள் அறிவற்ற கல்லா மூடர்களாயிருந்து வருந்தாது, ஆடவரைப்போல் கல்விகற்று, நல்லொழுக்கம், நல்லூக்கம், நல்லறிவு, நற்பிரதாபம் முதலிய நற்குணங்கள் ஒருங்கமையப்பெற்ற நற்குணவதிகளாயும், நாட்டிற்குத் திலகமாயும், சமுதாயங்களுக்கும் அணிகலனாயும் விளங்கவேண்டுமென்ற பெரியோர்களின் நோக்கம் மெச்சத்தகுந்ததே. இந்நோக்கம் நிறைவேறுமிடத்து அது நம் நாட்டுக்கு ஒரு பாக்கியமே. பெண் கல்வியின் பயனைப் பெண்கள் அடையின் அது அவர்கள் வாழ்வுக்குச் சிலாக்கியமே.

தற்காலத்துப் பெண் கல்வியின் பயன் யாதெனச் சிறிது ஆராய்வோம். எவ்விதம் ஆடவர்கள் பலகருத்துடன் அரசாங்கத்தில் உத்தியோகம் பெற வேண்டாமென்ற கருத்தின்றி, மேனாட்டுக் கல்வியைக் கைப்பற்றுகிறார்களோ, அவ்விதமே ஸ்திரீகளும் அதே கருத்தின்றி மேனாட்டுக் கல்வியைக் கைப்பற்றுவதில்லை. ஆடவரைப்போல் பெண்களும் பட்டதாரிகளாய் பல தொழில் துறைகளிற் பிரவேசிக்கப் பின்னிடுவதில்லை. மேல்நாட்டு நாகரீகத்தைத் தழுவ அஞ்சுவதில்லை. மேனாட்டுப் பெண்களைப்போல் நடிக்கவும், பெண் சுதந்தரத்திற்காக வாதிப்பதற்கும், புருஷரைச் சமமாய் நடத்துவதற்கும் பிரியமற்றிருக்கவில்லை. கீர்த்தி, பிரதாபம், பேர், புகழ், முதலியவற்றை நிலைநாட்டுதற்குரிய சாமர்த்தியம் பெண்களிடத்துக் குறைவில்லை. இவ்வாறு எல்லா அம்சங்களிலும், புருஷரைப்போலும், புருஷரைவிடவும், பரிபக்குவமடையும் பெண்கள், அரசாங்க உத்தியோகத்துக்கும், ஸ்திரீ சுதந்தரத்திற்கும் வாதிக்கும்போது, அதைச் செவிக்கேற்காமலும் கவனியாமலுமிருப்பது நடுவுநிலை தவறு ஓர் நல்ல அரசாட்சிக்கு நியாயமில்லை. ஆகையால் ஓர் நல் அரசாட்சி இவர்கள் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யும் என்று கூறத்தடையில்லை.

187441

மேல் நாட்டுப் பெண்கல்வி மேல் நாட்டுக்கு எந்தப் பயனை அளிக்கின்றதோ அதே பயனை அது இந்த நாட்டுக்கும் அளிக்கவில்லை என்று கூறின் அது சுத்தப் பொய்யாகும். அக்கல்வி அதன் பயனைப் பரவச்செய்யாதிருப்பின் அது அதன் கடமையைச் செய்யாத குற்றத்திற்கானாகும். பெண்கள் கல்வியின் பயனை யடையாதிருந்தால் அவர்கள் முயற்சி பயன்படாததாகும். அக்கல்வி நம் பெண்மணிகளின் வாழ்வை மாற்றாவிட்டால் அக்கல்வியின் ஊக்கம் வீணாகும். நம் பெண்மணிகள் அக்கல்வியின் பயனாய் மேனாட்டுப் பெண்மணிகளைப்போல் நடியாதிருப்பின் அது நன்றி மறத்தலாகும். கல்வியின் பயனை யடைந்தால் மாத்திரமே அக்கல்வி பூரணமாகும். (இந்த நியாயங்களால் மேல்நாட்டுக் கல்வியால் நமது பெண்மக்களின் ஆசாரம் முதலியவற்றில் மாறுதல் ஏற்படும் என்று தெளிவாய் விளங்குகிறது. இனி இதனால் நன்மை விளையுமா தீமைவிளையுமா வென்பதைக் கவனிப்போம்.)

ஒரு சாதனத்தை அடையுமுன் அது நமக்கு அவசியமா அவசியமில்லையா என்பதைச் சிந்தியாது, சேது நதிக்கரையில் ஒருவர் மண்ணில்

சிவலிங்க உருச் செய்வதைப்பார்த்த இதர ஜனங்கள் எல்லாரும் அவர் செய்ததின் நோக்கம் அறியாது, அதே மாதிரி தாங்களும் சிவலிங்க உருச் செய்த மாதிரி, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான்முதலிய தேசத்துப் பெண்கள் கற்கிறார்கள், ஆடவர் கற்கிறார்கள் என்று நமது பெண்கள் தமது நிலைமை இன்னதென்றும், அது பல் நூற்றாண்டுகளுக்குமுன் இருந்த ஸ்திதியாதென்றும் அறியாமல் இவர்களும் மேல்நாட்டுக்கல்வி பயில்வது நம் இந்தியப்பெண்களுக்கு, உசிதமற்றதும், அடாததும்,சிறிதும் பொருந்தாததுமாயிருக்கிறது. ஒருவனுக்கு அமுதாயிருப்பது மற்றொருவனுக்கு நஞ்சாயிருக்கிறது என்ற ஆங்கிலேயப் பழமொழிபோல், ஒரு தேசத்துக் குலாசாரம், பழக்க வழக்கம், ஒழுக்கம், கல்வி, நாகரீகம் முதலியவை மற்றொரு தேசத்துக்குப் பொருத்தமுள்ளதாயும் நன்மை தரத்தக்கதாயு மிருக்குமென்று சொல்லமுடியாது. ஒரு தேசத்து உடை, உணவு, ஆசாரம் முதலிய அந்த தேசத்துச் சீதோஷ்ண ஸ்திதியைத் தழுவி யிருப்பதுபோல், ஒரு தேசத்துக் கல்வியும் நாகரீகமும் அந்த தேசத்துக் குலாசாரம் பழக்க வழக்கங்களை ஒட்டினதாகவே இருக்கவேண்டுமென்பது ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளக்கூடிய ஓர் விஷயமே.

பெண்களுக்கு எது அவசியமோ அதைப் புகட்டாத மேல்நாட்டுக் கல்வியைப் பெண்கள் கைப்பற்றுவானேன்? பெண்களாய்ப் பிறந்தவர்களை நற்குணவதிகளாயும், குடும்பமாகிய அரசாங்கத்தை நன்கு பரிபாலிக்கத் தக்க சாதுரியமும் சாமர்த்தியமு முள்ளவர்களாயும், குழந்தைகளைப்போற்றி வளர்ப்பதற் கின்றியமையாத அன்பும் பொறுமையும் வாய்ந்தவர்களாயும் மாற்றுவதற்குரிய சக்தியற்ற மேல்நாட்டுக் கல்வி வற்புறுத்தப்படுவானேன்? மதாபிமானம், குலாபிமானம், தேசாபிமானம், உறவபிமானம் முதலியவற்றை ஒழித்து உடலபிமானம் உணவபிமானம், மதுவபிமானம், உடையபிமானம் முதலியவற்றை நம் மனத்தில் வேரூன்றித் தழைத்தோங்கச் செய்யும் இந்த மேல்நாட்டுக் கல்வியை நம் பெண்மணிகள் கைப்பற்றலாமா? "கற்றதனா லாயபயனென்கொல் வாலறிவ-நற்றா டொழா ரெனின்" என்னும் மெய்ம்மொழியை மறந்து, மேல்நாட்டு நாகரீகத்தை அனுஷ்டிக்கும்படி கட்டாயப்படுத்தும் இக்கல்வியை, வித்தியாசாலை, பெரியோர்கூடுமிடம், ஆலயம், முதலிய உயிர்க்குறுதியைச் செய்யக்கூடிய இடங்களுக்கு மனதைச் செல்லவொட்டாது தடுத்து, நாடகசாலை, சங்கீதசாலை, நடனசாலை, முதலிய விநோதசாலைகளுக்கு மனதைத் திருப்பும் இக்கல்வியை, புண்யவதிகளும், புனிதவதிகளும் சத்தியவதிகளும், பதிவிரதா சிரோன்மணிகளும், ஸமஸ்தலோகத்தாரும் புகழத்தகுந்த அருமையான அரிய குணக்குன்றாய் விளங்கும் பெண்மணிகளான, சாவித்திரி, நளாயினி, தமயந்தி, அருந்ததி, சீதை, துரௌபதி முதலிய பெண் பூஷணங்களைப்பற்றியும், இதிஹாஸம், புராணம் முதலிய திவ்ய பிரபந்தங்களைப்பற்றியும், சரியை, கிரியை, யோகம் என்ற மூன்றினுள் மூன்றாவதைக் கைப்பற்றிய யோகிகளைப்பற்றியும், லோகோபகாரத்திற்காக உடல் பொருள் ஆவி ஆகிய மூன்றினையும் அந்தக்கரண சுத்தியுடன் தியாகம்செய்த அவதார புருஷரத்தினங்களைப்பற்றியும், இந்தியாவிலேயே நமக்குத் தெரியாத பல நூதன விஷயங்களைப்பற்றியும், அறிவிக்காமலிருப்பதுடன் நாமாகவே அறியும் அவாவை யடையின், அவ்வவாவை அறவே ஒழிக்கும் இக்கல்வியை நம்மாதர் கைப்பற்றின் அவர்கள் கதி என்னாகும்?

பெண் கல்வியின் நோக்கம் பெண்களிடத்து நற்குணம், நாணம், மடமை, அச்சம், பயிர்ப்பு என்னும் மாதர்களுக்கு இன்றியமையா நாற்குணங்கள், பதிபக்தி, கடவுள்பக்தி, எவரிடத்தும் வாத்ஸல்யம் ஆகிய இவற்றை விருத்திசெய்யக் கூடியதா யிருந்தால் மாத்திரமே, பெண்கல்வி பெண்களுக்கு நலம் விளைவிப்பதாய்க் கூறலாம் என்பதை ஒவ்வொரு ஸ்திரீயும் அறியவேண்டும். இதிற்குறித்த கல்வியை மாத்திரமே மாதர் நேசிக்கவேண்டும். அல்லாத (பயனளிக்காத) கல்வி மாட்டுள்ள ஆசையை அகற்றவேண்டும். நமது பூர்வீக அவதாரப்பெண்மணிகள் கைப்பற்றின மார்க்கத்தையே எல்லா இந்தியமாதரும் கைப்பற்றவேண்டும். அதுவே இந்திய மாதின் கடமை யென்பதை ஒவ்வொருமாதும் உணரவேண்டும். மேல்நாட்டு ஆசாரம், ஒழுக்கம், கல்வி, நாகரீகம் முதலியவை நம் ஆரியவர்க்கத்துக்குப் பொருந்தாதனவும், அடாதனவும், இன்னல் விளைவிக்கக்கூடியனவுமா மென்பதை ஒவ்வொருமாதும் அறியவேண்டும். இவ்வுண்மையைத் தெரிந்து ஆரியப் பெண்களைப்போல் ஒழுகல்வேண்டும். யோகிகளும், ஞானிகளும், பக்தர்களும், நடுவு நிலைதவறாத கணக்கற்ற மன்னர்களும் இந்நாட்டில் உற்பத்தியானது இந்நாட்டு மாதர்களின் நல்லொழுக்கத்தாலேயே என்பதை ஒவ்வொருவரும் அறியவேண்டும். அறிந்து அவ்வரிய குணங்களை மனதில் பயிர் செய்ய முயலவேண்டும். அதற்கேற்ற கல்வியைக் கற்கவேண்டும். அவ்விஷயங்களைப் போதிக்கும் 'ஆனந்தபோதினி' போன்ற பத்திரிகைகளை ஆனந்தமாய்ப் பார்வையிடவேண்டும். அவ்விதம் வாழ்வதே பெண்களுக்குச் சிலாக்கியம். அதுவே அவர்களுக்குப் பெரியதோர் பாக்கியம். இல்லாவிட்டால் இப்பெண் வாழ்வால் யாது யோக்கியம்?

N. சுப்பிரமணிய அய்யர்,
கிழக்கு ரதவீதி, நாகர்கோவில்.

மாணவர்களுக்கு ஓர் நற்புத்தி.

மாணவ நண்பர்களே! நமது சஞ்சிகையில் அடிக்கடி உங்களுக்கு அவசியமான பல விஷயங்களை நமது ஆனந்தன் மூலமாக வெளியிடுகிறோம். ஆனால் நமது நாட்டில் பெரும்பாலார் இன்னும் பத்திரிகைகளை வாசிப்பது காலப்போக்குக்காக வென்றும், வாசித்து விஷயத்தை மறந்து

விட்டுப் பத்திரிகையை எறிந்து விடவேண்டியதே நாம் செய்யவேண்டிய வேலையென்றும் கருதுகிறார்களே யன்றி, அவற்றிலுள்ள நல்ல விஷயங்களை மனதில் வைத்து அதன்படி நடக்க வேண்டியது அவசியமென்றும், அப்போதுதான் பத்திரிகைகளா லாயபயனை யடைந்து முன்னேற்றமடைவோ மென்றும் உணர்கிறார்க ளில்லை. அதனால்தான் சிலர் ''பத்திரிகைகளை வாசிக்க அவகாசமில்லை'' என்கிறார்கள்.

மாணவர்களாகிய நீங்கள் அவ்வாறு நடக்கமாட்டீர்க ளென்றே நம்புகிறோம். நம் தாய்நாட்டின் எதிர் காலக்ஷேமத்திற்குப் பொறுப்பாளிகளாகிய நீங்கள் அவ்வாறு தெளிவிலார்போல் ஒழுகுவீர்களாயின் அந்தோ நம் தாய்நாடு ஒருகாலும் முன்னேற்ற மடையாது.

இப்போது நீங்கள் கற்கும் கல்வி பிற்காலத்தில் நீங்கள் துரைத்தனத்தாரிடம் ஊழியம்செய்து ஊதியம் பெறமட்டுமே யுதவியாகிறதே யன்றி உங்களைக் கல்விமான்க ளாக்குவதுமில்லை உங்கள் ஆன்மா ஈடேறும் மார்க்கத்தைக் காட்டுவதுமில்லை. ஏனெனில் இக்காலத்தில் உங்களுக்குக் கல்வி போதிக்கப்படும் முறைமையும், நீங்கள் வாசிக்கும் பாடபுத்தகங்களும் அவ்வாறிருக்கின்றன. முற்காலத்தில் நம் நாட்டில் கல்வி போதிக்கப்பட்ட முறைமைக்கும் இக்காலத்து முறைமைக்கும் முக்கியமான விஷயங்களில் நேர்மாறான வித்தியாச மிருக்கிறது. எவ்வா றெனின்;—

1. முற்காலத்தில் உபாத்தியாயர் கல்வி யறிவோடு உலக அனுபவமும் தக்க யோக்கியதைகளும் உடையவராக விருப்பார் (நன்னூலில் ஆசிரியரிலக்கணம் பார்க்க.)

இக்காலத்தில் மேல்நாட்டு முறைப்படி, எவ்வாறு அவர்கள் மதநூலாகிய பைபிளை வாசித்துவிட்டமட்டில் குருபதவி யடைகிறார்களோ, அவ்வாறே வயது, உலக அனுபவம், தக்க நடக்கை இவைகள் ஒன்றையும் கவனியாமலே, குறித்த அளவு நூற்கல்விமட்டு மிருப்பவர்கள் உபாத்தியாயர்களாக வந்துவிடுகிறார்கள். இதன் பிரதிகூலங்களை விரிக்கிற்பெருகும்.

2. முற்காலத்தில் உபாத்தியாயர் ஒவ்வொரு மாணவனுடைய புத்தியின் அளவை யறிந்து அவனவனுக்குத் தக்கபடி போதிப்பதோடு தக்க கல்வியைப் போதிப்பார். இதனால் மாணவனுக்கு உபாத்தியாயரின் போதனை சுலபத்தில் நன்றாக மனதில் பதிகிறது.

ஒரே வயித்தியன் எல்லாருக்கும் ஒரே ஔடதத்தைப் பிரயோகித்தால் சிலருக்குப் பயனுண்டாகும் சிலருக்குண்டாகாது. ஆகையால் அவரவர் தேகக்கூறையறிந்து அவரவர்க்குத் தக்க ஔடதத்தையே சரியான வைத்தியன் கொடுப்பான். அதுபோன்றே மாணவர் புத்தியிலும் பேதங்கள் உண்டு. அதாவது நாம் முன் ஒரு சஞ்சிகையில் கூறியுள்ளபடி 1. சிலாபுத்தி, 2. தாருபுத்தி, 3. வேணுபுத்தி, 4. தைலபுத்தி என புத்தியில் நால் வகையுண்டு.

இவற்றில்,

1. சிலாபுத்தி.—சிலை என்றால் கல்—கல்லில் ஒரு உருவத்தைச் செதுக்குவது மிக்க கஷ்டம். ஆனால் செதுக்கிவிட்டாலோ அது கொஞ்சத்தில் அழியாது. அதைப்போல் சிலாபுத்தி யுடையோன் மனதில் ஒன்றைப்பதியச் செய்வது மிகக்கஷ்டம். பதிந்து விட்டால் அது எப்போதும் மனதில் நிலைத்து நின்றுவிடும்.

2. தாருபுத்தி — தாரு என்பது மரம். மரத்தில் ஒரு உருவத்தைச் செதுக்குவது சுலபம். ஆனால் அது சுலபமாய்த் தேய்ந்துபோம்.

3. வேணுபுத்தி — வேணு என்பது மூங்கில். மூங்கிலின் ஒருபக்கக் கணுவில் உளிவைத்தடித்தால் மறுபக்கங்கூட பிளந்து கொள்ளும் — அவ்வாறே வேணுபுத்தி யுடையோனுக்கு ஒரு விஷயத்தைப்பற்றி திருட்டாந்தத்தைமட்டும் கூறினால் தாஷ்டாந்தத்தை யவனே யுணர்ந்து கொள்வான்.

4. தைலபுத்தி — தைலம் என்பது எண்ணெய்—எண்ணெய் ஒரு நூலின் ஒரு நுனியில் பிடித்தால் அங்கிருந்து முழுமையும் ஊறிவிடுகிறது. அவ்வாறே தைலபுத்தி யுடையோன் ஒரு விஷயத்தை யுணர்ந்தால் அதைப் பற்றிய முன்பின் விஷயங்களைக் கிரகித்துக்கொள்வான்.

இவ்வாறு புத்தியில் வித்தியாசம் இருப்பதால் உபாத்தியாயர் எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரி போதனை செய்வதால் எவ்வளவு பிரதிகூலமிருக்கிறதென்பதை நீங்களே யுணரலாம்.

5. முற்காலத்தில் ஒருவன் பெரும்பாலும் ஒரு உபாத்தியாயரிடமே தன் கல்விமுழுமையும் கற்பான். அதனால் உபாத்தியாயருக்கு அவன் மனோநிலைமை நன்றாகத் தெரிந்திருப்பதால் அவர் போதனை யவனைச் சீக்கிரத்தில் பயிற்சி யடையச் செய்கிறது.

6. முற்காலத்தில் ஒரு மாணவனுக்கு ஏககாலத்தில் ஒன்று இரண்டு பாடங்களே கற்பிக்கப்படும். அந்த நூல்கள்முடிந்த பிறகே வேறு தொடங்குவான். பையன் என்ன வாசிக்கிறான் என்றால் "நிகண்டு வாசிக்கிறான்". "நைடதம் வாசிக்கிறான்", "இராமாயணம் வாசிக்கிறான்" "குறள் நாலடியார் வாசிக்கிறான்" என்றுதான் கூறுவார்கள். அவ்வாறு வாசிப்பதால் வாசித்ததைப் பூரணமாய் வாசித்தவர்களாகிறார்கள்.

இக்காலத்தில் மாணவர்கள் ஒரேவிஷயத்தில் தங்கள் மனதை நிறுத்தும்படி செய்தால் களைப்படைவார்கள் என்று கூறி அவர்கள் மனம் குரங்குபோல் அடிக்கடி யொரு விஷயத்தை விட்டு ஒரு விஷயத்தில் தாண்டிக்கொண்டிருக்கும்படிச் செய்கிறார்கள். அந்தோ இது நம்முன்னோர் மார்க்கத்திற்கும் நோக்கத்திற்கும் நேர்மாறானது.

நண்பர்களே! மேலே நாம் கூறிய அநுகூலங்களை யெல்லாம் நீங்கள், இக்காலத்தில் கல்வி முறை யிருக்கும் நிலைமையில், அடைய முடியாதெனி

னும், ஒன்றை - மிக்க முக்கியமான ஒன்றைமட்டும் அடையக்கூடும். அதை நீங்கள் உங்கள் சுயமுயற்சியா லடையலாம் - அதனால் இம்மையிலும் மறுமையிலும் பயன்பெறலாம் - அதை வற்புறுத்திக் கூறவே மேற் கண்டவற்றை யெல்லாம் நாம் கூறநேர்ந்தது. அதுதான் மனப்பயிற்சி என்பது.

முற்காலத்தில் இதுவே முக்கியமாக மாணவர்களுக்குப் போதிக்கப் பட்டது. இது யோக சாதனத்தின் ஆரம்பப்பயிற்சியுமாகும். மேல் நாட்டார் மனதின் தன்மையையும் பெருமையையும் அறியார்கள். மனதிற்கு மேற்பட்ட நிலை யொன்றுண்டென்பதை யவர்க ளறியார்கள். ஆகையால் அவர்கள் மனதை ஒரு இடத்தில் நிலைக்கச்செய்வதன் நன்மையை யுணராது அதை யடிக்கடி மாறச்செய்யும் முறைமையைப் போதிக்கிறார்கள். மாணவர்மனம் ஒரேவிஷயத்தில் நிலைத்திருந்தால் களைப்படையும் என்று கருதுவது முற்றுந்தவறு. அது அனுபவத்திற்கு மாறான கருத்தாகும்.

ஒரு சிறுவன் ஒரு வேடிக்கையைப் பார்க்கிறான், அல்லது கோலியோ பந்தோ ஆடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அக்காலங்களில் அவன் மனநாட்டம் நெடுநேரம் ஒரேவிஷயத்தி லிருக்கிறது. களைப்படைவது மில்லை, ஆயாசமடைவது மில்லை. ஏன் ? அவ்விஷயத்தில் அவனுக்கு உற்சாகமும் ருசியும் தோன்றுகின்றன. ஆகையால் மாணவர்களுக்கு ஒரு கல்வியில் விருப்பமும் உற்சாகமு முண்டாகும்படி செய்துவிட்டால் ஒரே விஷயத்தில் மனம் நிலைத்திருக்கச் செய்வதால் ஒரு கெடுதியுமில்லை.

முற்காலத்தில் அவ்வாறு பயிற்சிசெய்து வந்தார்கள். அதில் தேர்ச்சியடைந்தோர் சிலர் ஒன்றை யொருமுறை வாசிப்பதாலேயே அது மனதில் நிலைத்திருக்கச் செய்துகொள்ளக் கூடிய சக்தி பெற்றிருந்தார்கள். ஒரு நூல் முழுமையும் ஒரேமுறை வாசித்தால்,பூரணமாய் அது மனதில் பதிந்துவிடும். அவர்கள்தான் ஏகசந்தக்கிராகிகள் என்போர். அவ்வாறே இருமுறையே வாசிப்பதால் மனதில் பதியச்செய்து கொள்வோர்க்கு துவிசந்தக்கிராகிகள் என்று பெயர்.

நண்பர்களே ! நீங்கள் மனப்பயிற்சி செய்யுங்கள். அதனால் பெரும் பயனடைவீர்கள். உங்கள் பாடங்களைச் சுலபமாய் மனதில் பதியச்செய்துகொள்வதோடு இவ்வுலக விவகாரங்களிலேயே எவ்வளவோ காரியங்களில் அபூர்வ உதவி பெறுவீர்கள். உங்கள் பாரமார்த்திகத்திற்கோ இது இன்றியமையாப் பேருதவியாகும். மனதை யொரு இடத்தில் நிலை நிறுத்தப்பழகும் அப்பியாச வாயிலாகவே ஈசுரனருளைப் பெறலாகும். இப்பழக்கத்தைத் தினந்தோறும் இடைவிடாமல் செய்யவேண்டும். இதனால் உங்கள் இலௌகிக விஷயங்கள் ஒன்றுமே தடைப்பட வேண்டிய அவசியமில்லை. இப்போதனையை யலட்சியம் செய்யமாட்டீர்க ளென்று நம்புகிறோம். சச்சிதானந்தப் பரம்பொருள் உங்கட்கு நல்லருள் புரியப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் தத் ஸத்.

சீடன்.

தபால் கொள்ளைக்காரர்கள்.

(119-ம் பக்கத் தொடர்ச்சி.)

இதனால் அந்த ஆள் கற்களை யெடுக்க வெடுக்க உள்ளிருந்து வரும் வேதனைச்சத்தம் நன்றாய் அவன் செவிகளில் விழுந்தன. அவன் மிக்க உற்சாகத்தோடு கஷ்டப்பட்டு யாவற்றையும் எடுத்து வெளியிலெறிந்துவிட்டுக் கடைசியில் கஷ்டத்தோடு அப்பலகைகளை யெடுத்து விட்டுப் பிறகு சொல்லொணாக் கஷ்டத்தோடு ஆனந்தஸிங்கை வெளியிற் கொண்டுவந்தான். ஆனந்தஸிங் இன்னும் ஸ்மரணை யில்லாமலே யிருக்கிறான்.

வெளியிலிருந்த காற்று தாராளமாய் வீசவே ஆனந்தஸிங் சற்றுநேரத்திற்குள் ஸ்மரணை யடைந்தான். ஒரு பெருமூச்சுவிட்டு மெதுவாய் எழுந்து உட்கார்ந்தான். நாற்புறங்களிலும் விழித்துப் பார்த்தான். எதிரிலிருக்கும் ஆளைப்பார்த்தான்.

“ நான் எங்கே யிருக்கிறேன் ?...ஆ ! குடிசையண்டை உள்ளே யெட்டிப் பார்த்துக்கொண் டிருந்தேன். ஆம், ஆ! என் தலைமேல் யாரோ அடித்தார்கள்—யார் அடித்தது ? ” என்றான்.

அந்த ஆள்:—“ அக்கள்ளரில் ஒருவன் அடித்தான் ” என்றாள்.

ஆனந்த:—அப்புறம் என்ன நடந்தது ?

அந்த ஆள்:—“அப்புறம் அவர்கள் உன்னை யிக்கிணற்றில் போட்டு மேலே கல் முதலியவைகளைப் போட்டுப் பேர்பாதி மூடிவிட்டார்கள்: அவர்கள் சென்றபின் நான் உன்னை வெளியி லெடுத்தேன் ” என்றான்.

ஆனந்தஸிங்.—“ஆ நீயா என்னைக் காப்பாற்றினாய். நீ யார்?” என்றான்.

